## பொருளடக்கம்



| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | வெயிலில் நடக்கின்ற மக்கள் | 1 |
| 2. | திருக்குர்ஆனிலும் நபிமொழியிலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களின் வருகை பற்றிய முன்னறிவிப்பு | 2 |
| 3. | எனது கைகளின் மூலமாக இஸ்லாத்தை எல்லா மார்க்கங்கள் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காகவே நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேன் | 4 |
| 4. | ஜுமுஆ பேருரை - 24 மார்ச் 2017 | 5 |
| 5. | எச்சரிக்கை மற்றும் நற்செய்தியினைக் கொண்ட முன்னறிவிப்புகளின் ஒளியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் | 19 |



لا اله الا الله محمد رسول الله

# வெயிலில் நடக்கின்ற மக்கள்

இறைவன் புறமிருந்து எந்த ஒரு தூதர் வந்தாலும் அவர்கள் பரிகாசம் செய்யப்பட்டிருக்கின்றார் என்ற இறைவனின் இந்த கூற்று உண்மையானது என்றால், பிறகு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி கூட பரிகாசம் செய்யப்படுவது அவசியமானதாக இருந்தது. எனவே, வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு இருக்கின்ற எதிர்ப்பு அவர்களது உண்மைக்கான ஆதாரமாக இருக்கின்றது. அது அல்லாமல் அது அவர் பொய்யராக இருக்கின்றார் என்பதற்கான ஆதாரம் அல்ல. குறிப்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை எதிர்த்த மவ்லவிமார்களும் ஆலிம்கள் என்று தங்களைக் கூறிக் கொண்டவர்களும் மிகவும் பாக்கியமற்றவர்–களாக இருக்கின்றனர். அவர்கள், தாங்களும் வழிகேட்டில் சென்று சமுதாயத்தையும் வழிகெடுத்து விட்டனர். திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியின் அடிப்படையில் மர்யமின் மகன் ஈஸா அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். திருக்குர்ஆனின் அடிப்படையில் இறந்து விட்ட ஒரு நபர் உலகிற்கு மீண்டும் வரமாட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த ஈஸா இறங்குவது தொடர்பாக முன்னறிவிப்பு செய்துள்ளார்களோ அவர் தொடர்பாக அவர்கள் உங்களிலிருந்தே தோன்றுவார் என்றே கூறியுள்ளார்கள். முஸ்லிம் ஆலிம்கள் திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிக்கு மாற்றமாக இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் இஸ்ரவேல் சந்ததிகளுக்கு நபியாக வந்திருந்த மர்யமின் மகன் ஈஸா அவர்கள் இப்போது வரை வானத்தில் உயிருடன் அமர்ந்துள்ளார்கள். அவர்கள்தான் வானத்திலிருந்து இறங்கி வருவார்கள் என்ற மிகவும் வழிகேடான கொள்கையில் இருந்து வருகின்றனர். இறுதியில் அவர்கள் எப்போதுதான் இறங்கி வருவார்கள்? அவர்கள் இறங்கி வரப்போவதில்லை. ஏனென்றால் அவர்கள் மரணமடைந்துவிட்டார்கள். ஆனால், அல்லாஹ் முஹம்மதிய உம்மத்தின் மீது கருணை காட்டியவாறு எந்த மஸீஹை இறக்கினானோ அவர்களை அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியும் ஆகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களை இவர்கள் எதிர்க்கின்றனர். அல்லாஹ்வால் அனுப்பட்டவர்களுக்கு எதிர்ப்பு ஏன் ஏற்படுகின்றது? என்பதை பற்றி ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

### இறை இயக்கங்களின் எதிர்ப்பிற்கான அசல் காரணம்

ஒரு நபி அல்லது தூதர் இறைவன் புறமிருந்து அனுப்பப்படும் போது மேலும், அவரது பிரிவு திறமை பெற்றவர்களும் உண்மையாளர்–களும் தைரியமுள்ளவர்களும் முன்னேறுபவர்களும் இருக்கின்ற ஒரு பிரிவாக மக்களுக்கு தென்படுகின்றபோது அதைப் பற்றி அப்போது இருக்கின்ற சமுதாயங்கள் மற்றும் பிரிவுகளின் உள்ளங்களில் கண்டிப்பாக ஒரு வகையான காழ்ப்புணர்வும் பகைமையும் உருவாகி விடுகின்றது. குறிப்பாக ஒவ்வொரு மதத்தைச் சார்ந்த ஆலிம்களும் பீர்களின் வழியில் வந்தவர்களும் மிகவும் அதிகமாக காழ்ப்புணர்வை வெளிப்படுத்துகின்றனர். ஏனென்றால், இறைவனின் இந்த வீரரின் தோற்றத்தினால் அவர்களது வருமானங்களிலும் பொலிவுகளிலும் வித்தியாசம் ஏற்பட்டு விடுகின்றது. ஆலிம்கள் மற்றும் ஷேஹ்களின் பிரிவு எப்போதும் நபிமார்கள் மற்றும் தூதர்களிடம் பொறாமை கொண்டே இருந்திருக்கின்றது. இதற்குக் காரணம் என்னவென்றால், இறைவனால் நியமிக்கப்பட்டவர்கள் மற்றும் அவனது நபிமார்களின் காலத்தில் கடுமையான முறையில் இவர்களது திரை கிழிக்கப்படுகின்றது. ஏனென்றால், உண்மையில் அவர்கள் குறையுள்ளவர்களாக இருக்கின்றனர். ஒளியின் மிகவும் குறைவான பங்கையே அவர்கள் பெற்றிருக்கின்றனர். இறைவனது நபிமார்கள் மற்றும் உண்மையாளர்களிடத்தில் அவர்களுக்கு இருக்கின்ற பகைமை முழுக்க முழுக்க அவர்களது மன இச்சையின் அடிப்படையிலேயே இருக்கின்றது. மேலும், முழுக்க முழுக்க மனிதன் சுய விருப்பத்தைப் பின்பற்றிச் சென்றவாறு அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்துவதற்கான திட்டங்களை அவர்கள் சிந்திக்கின்றனர். இன்னும் சொல்வதென்றால், அவர்கள் இறைவனின் ஒரு தூய அடியாருக்கு எவ்வித உரிமையும் அவர்களுக்கு இல்லாத நிலையில் துன்பமிழைத்து இறைவனின் கோபத்தின் கீழ் அவர்கள் வந்து விட்டனர் என்பதை அவர்கள் தமது உள்ளங்களில் உணரவும் செய்கின்றனர். எதிர்ப்பு வேலைகளுக்காக எல்லா சமயத்திலும் அவர்களது செயல்கள் இருந்து வருவது கூட அவர்களது உள்ளத்தில் அவர்கள் குற்றம் புரிந்துள்ள நிலைமையை அவர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டிக் கொண்டே இருக்கின்றது. அவ்வாறிருந்தும் கூட பொறாமையின் நெருப்பின் வேகமான இஞ்ஜின் பகைமையின் குழிகளின் பக்கம் அவர்களை இழுத்துக் கொண்டு வருகின்றது. இந்த காரணிகள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இணை வைப்பவர்கள், யூதர்கள் மற்றும் கிறித்தவ ஆலிம்களை உண்மையை ஏற்றுக் கொள்வதிலிருந்து விலக்கி மட்டும் வைக்கவில்லை. மாறாக, கடுமையான பகைமை கொள்வதற்கும் அது அவர்களைத் தூண்டியது.

(கவர்ன்மெண்ட் அங்ரேஸி அவர் ஜிஹாது. ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 3)

(தொடர்ச்சி 13-வது பக்கம்...)

# திருக்குர்ஆனிலும் நபிமொழிகளிலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களின் வருகை பற்றிய முன்னறிவிப்பு

❁ هُوَ الَّذِي بَعَثَ فِي الْأُمِّيِّينَ رَسُولًا مِّنْهُمْ يَتْلُو عَلَيْهِمْ آيَاتِهِ وَيُزَكِّيهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتَابَ وَالْحِكْمَةَ ۚ وَإِن كَانُوا مِن قَبْلُ لَفِي ضَلَالٍ مُّبِينٍ ۝ وَآخَرِينَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوا بِهِمْ ۚ وَهُوَ الْعَزِيزُ الْحَكِيمُ ۝

மொழியாக்கம்: அவனே எழுதப் படிக்கத் தெரியாத மக்களுக்கு – அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்த போதிலும் – அவனது கட்டளைகளை படித்துக் காட்டி, அவர்களை தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும் நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான்.

மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்–கிடையிலும் (அவரை எழுப்புவான்). அவன் வல்லமை மிக்கவனும் நுண்ணறிவுள்ளவனுமாவான். (63:3,4)

ஸய்யிதுனா ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹுத்தஆலா அவர்கள் இவ்வசனங்களுக்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தில் மற்றவர்களுக்கிடையில் கடந்த வசனத்தில் (அதாவது هُوَ الَّذِي بَعَثَ فِي الْأُمِّيِّينَ رَسُولًا என்ற வசனத்தில்) குறிப்பிடப்–பட்டிருந்த அதே தூதரின் வருகை பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இந்த வசனத்தில் வசனம் எண் 2–ல் குறிப்பிடப்பட்டிருந்த அந்த நான்கு இறை பண்புகளும் குறிப்பிடப்படவில்லை. மாறாக, அஸீஸ் மற்றும் ஹகீம் ஆகிய இரண்டு பண்புகள் மட்டுமே திரும்பவும் கூறப்பட்டிருக்கின்றது. அதிலிருந்து எந்த தூதரைப் பற்றி ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததோ அவர் சுயமே மீண்டும் தோன்ற மாட்டார். மாறாக, அவர் நிழலாக இருக்கின்ற ஒருவர் அனுப்பப்படுவார். அவர் ஷரீஅத்துடைய நபியாக இருக்க மாட்டார் என்பது தெரிய வருகின்றது. உள்ளத்தை ஈர்க்கக் கூடிய சுவையான விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாகவும் இதே இரண்டு இறை பண்புகளுமே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான்: بَل رَّفَعَهُ اللَّهُ إِلَيْهِ ۚ وَكَانَ اللَّهُ عَزِيزًا حَكِيمًا மாறாக, அல்லாஹ் அவருக்குத் தன்னிடம் உயர்வைக் கொடுத்தான். அல்லாஹ் வல்லவனும் நுண்ணறிவுள்ளவனுமாவான். (4:159)

❁ وَإِذْ قَالَ عِيسَى ابْنُ مَرْيَمَ يَا بَنِي إِسْرَائِيلَ إِنِّي رَسُولُ اللَّهِ إِلَيْكُم مُّصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيَّ مِنَ التَّوْرَاةِ وَمُبَشِّرًا بِرَسُولٍ يَأْتِي مِن بَعْدِي اسْمُهُ أَحْمَدُ ۖ فَلَمَّا جَاءَهُم بِالْبَيِّنَاتِ قَالُوا هَٰذَا سِحْرٌ مُّبِينٌ ۝ وَمَنْ أَظْلَمُ مِمَّنِ افْتَرَىٰ عَلَى اللَّهِ الْكَذِبَ وَهُوَ يُدْعَىٰ إِلَى الْإِسْلَامِ ۚ وَاللَّهُ لَا يَهْدِي الْقَوْمَ الظَّالِمِينَ ۝

மொழியாக்கம்: மர்யமின் மகன் ஈஸா தன் சமுதாயத்தினரிடம், இஸ்ராயீலின் மக்களே! நிச்சயமாக நான் எனக்கு முன்னர் தவ்ராத்தில் கூறப்பட்டதை நிறைவேற்றக் கூடியவனாகவும், எனக்கு பின்னர் வரப்போகின்ற அஹ்மது என்னும் பெயரைக் கொண்ட ஒரு தூதரைப் பற்றி நற்செய்தி வழங்குபவனாகவும் உங்களிடம் அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதராவேன் என்று கூறிய நேரத்தை (நினைத்துப் பாருங்கள்). பின்னர் அவர் தெளிவான சான்றுகளுடன் அவர்களிடம் வந்தபோது, இது மிகத் தெளிவான மந்திர வித்தையாகும் என்று அவர்கள் கூறினர். அவர் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கப்படுகையில் அல்லாஹ்வுக்கு எதிராகப் பொய்யைப் புனைந்துரைப்பவனை விட மிகவும் அநீதியிழைப்பவன் எவன்? அநீதி இழைத்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுவதில்லை. (61:7,8)

வசனம் எண் 7,8 –ற்கு விளக்கமளித்தவாறு ஸய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இவ்வசனத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி பர்னபாஸ் சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னறிவிப்பு உள்ளது. கிறித்தவர்கள் இதனை பொய்யான சுவிசேஷம் என்று குறிப்பிடுகின்றனர். ஆனால், இது போப்பின் நூலகத்தில் காணப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி நடைமுறையில் உள்ள புதிய ஏற்பாடாகிய இஞ்ஜீலில் 'பாரேகலீத்' பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பொருள் அஹ்மது என்பதேயாகும். எனவே, இவ்வசனத்தில் நேரடியாகவும் அடுத்த அதிகாரத்தில் கூறப்பட்டது போன்று அன்னாரது இரண்டாவது தோற்றம் பற்றி மறைமுகமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வசனம் எண். 8 –ற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இவ்வசனத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் நிழலாக தோன்றுகின்ற ஒருவரைப் பற்றி குறிப்பாக கவனமூட்டப்பட்டிருக்–கின்றது. அவர் இந்த முன்னறிவிப்பிற்கு மறைமுகமாக பொருந்தக் கூடியவராக இருக்கின்றார். ஆனால் முன்னறிவிக்கப்பட்ட அந்த தூதர் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கப்படுவார் என்று இங்கு கூறப்பட்டுள்ளது. முஹம்மது (ஸல்) அவர்களோ உலகை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தார்கள்.

## உங்களது இமாம் உங்களிலிருந்தே தோன்றுவார்

● عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: كَيْفَ أَنْتُمْ إِذَا نَزَلَ ابْنُ مَرْيَمَ فِيكُمْ وَإِمَامُكُمْ مِنْكُمْ وَفِي رِوَايَةٍ فَأَمَّكُمْ مِنْكُمْ

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "மர்யமின் மகன் (அதாவது ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஒப்பானவர்) உங்களிலிருந்து தோன்றி உங்களுக்கு இமாமாக இருக்கும்போது உங்களது நிலை எவ்வாறிருக்கும்?"

இன்னோர் அறிவிப்பில், "அவர்கள் உங்களிலிருந்து தோன்றியதன் காரணமாக உங்களுக்கு இமாமத் செய்கின்ற கடமைகளை நிறைவேற்றுவார் என்றும் வந்துள்ளது." (புகாரி கிதாபுல் அன்பியா)

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் [அலை] அவர்களின் பணி

● عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: لَا تَقُومُ السَّاعَةُ حَتَّى يَنْزِلَ عِيسَى بْنُ مَرْيَمَ حَكَمًا مُقْسِطًا وَإِمَامًا عَدْلًا فَيَكْسِرُ الصَّلِيبَ وَيَقْتُلُ الْخِنْزِيرَ وَيَضَعُ الْجِزْيَةَ وَيَفِيضُ الْمَالُ حَتَّى لَا يَقْبَلَهُ أَحَدٌ

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"எதுவரை நீதியுடன் தீர்ப்பு கூறுபவராகவும் நீதியுடன் செயல்படுகின்ற இமாமாகவும் இருக்கப்போகின்ற மர்யமின் மகன் ஈஸா தோன்றமாட்டார்களோ அதுவரை கியாமத் வராது. (அன்னார் தோன்றும்போது) அவர்கள் சிலுவையை முறிப்பபார்கள். பன்றியைக் கொல்வார்கள். ஜிஸ்யா செலுத்தும் வழிமுறையை முடிவுக்குக் கொண்டு வருவார்கள். மேலும் எத்தகைய செல்வத்தை அவர்கள் பங்கிட்டுக் கொடுப்பார்கள் என்றால் அதனை மக்கள் ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்க மாட்டார்கள்." (சுனன் இப்னி மாஜா கிதாபுல் ஃபிதன் பாபு ஃபித்னதுத்தஜ்ஜாலி வ ஹுரூஜி ஈஸப்னி மர்யம் வ ஹுரூஜி யஃஜூஜ வமஃஜூஜ்.)

## இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றும் காலம்

● عَنْ حُذَيْفَةَ بْنِ يَمَانٍ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: إِذَا مَضَتْ أَلْفٌ وَمِائَتَانِ وَأَرْبَعُوْنَ سَنَةً يَبْعَثُ اللهُ الْمَهْدِيَّ

ஹஸ்ரத் ஹுதைஃபா பின் யமான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "1240 (வருடங்களுக்குப்) பிறகு அல்லாஹ் மஹ்தியை அனுப்புவான்."

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் [அலை] அவர்களின் காலத்தை அடைந்தால் அவர்களுக்கு எனது ஸலாத்தை எட்ட வையுங்கள் என்ற பெருமானார் [ஸல்] அவர்களின் கட்டளை

● أَلَا إِنَّ عِيْسَى بْنَ مَرْيَمَ لَيْسَ بَيْنِيْ وَبَيْنَهُ نَبِيٌّ وَلَا رَسُوْلٌ، أَلَا إِنَّهُ خَلِيْفَتِيْ فِيْ أُمَّتِيْ مِنْ بَعْدِيْ، أَلَا إِنَّهُ يَقْتُلُ الدَّجَّالَ وَيَكْسِرُ الصَّلِيْبَ وَيَضَعُ الْجِزْيَةَ، وَتَضَعُ الْحَرْبُ أَوْزَارَهَا أَلَا مَنْ أَدْرَكَهُ فَلْيَقْرَأْ عَلَيْهِ السَّلَامَ

எச்சரிக்கையாக இருங்கள்! மர்யமின் மகன் ஈஸா (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) அவர்களுக்கும் எனக்கும் இடையில் எந்தவொரு நபியோ அல்லது தூதரோ தோன்ற மாட்டார். கவனமாக கேளுங்கள்! அவர் எனக்கு பிறகு எனது சமுதாயத்தில் எனது கலீஃபாவாக இருப்பார். நிச்சயமாக அவர் தஜ்ஜாலைக் கொலை செய்வார். சிலுவையை (அதாவது சிலுவைக் கொள்கையை) துண்டு துண்டாக உடைத்து விடுவார். ஜிஸ்யாவை முடிவுக்குக் கொண்டு வந்து விடுவார் (அதாவது அதை செலுத்தும் வழக்கம் இல்லாமல் ஆகிவிடும். ஏனென்றால்) அந்த நேரத்தில் (மார்க்கப்) போர்கள் முடிவுக்கு வந்து விடும். நினைவில் கொள்ளுங்கள். அவர்களை சந்திக்கின்ற நற்பேறு எவருக்கு கிடைத்தாலும் அவர் அவர்களுக்கு எனது ஸலாத்தை கண்டிப்பாக எட்ட வைக்க வேண்டும். (திப்ரானி அவ்ஸதுஸ் ஸகீர்)

## இமாம் மஹ்தியிடம் பைஅத் செய்யுமாறு வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கும் கட்டளை

● فَإِذَا رَأَيْتُمُوْهُ فَبَايِعُوْهُ وَلَوْ حَبْوًا عَلَى الثَّلْجِ فَإِنَّهُ خَلِيْفَةُ اللهِ الْمَهْدِيُّ-

முஸ்லிம்களே! உங்களுக்கு அவரை (இமாம் மஹ்தியைப்) பற்றி தெரிந்து விட்டால் உடனடியாக அவரிடம் பைஅத் செய்து விடுங்கள். உங்களுக்கு பனிக்கட்டிகளில் முழங்கால்களால் தவழ்ந்து செல்ல நேரிட்டாலும் சரியே! ஏனென்றால், அவர் இறைவனின் கலீஃபாவாகவும் மஹ்தியாகவும் இருப்பார். (அபூதாவூது பாபு ஹுரூஜுல் மஹ்தி)

......☆......☆......☆......

*(கடைசிப் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறை வாக்குறுதியின் ஒளியில் மிக உறுதியாக கூறுகின்றார்கள்:

மக்களே! கேட்டுக் கொள்ளுங்கள். இது வானம் மற்றும் பூமியைப் படைத்த இறைவனின் முன்னறிவிப்பாகும். அவன் தனது இந்த ஜமாஅத்தை முழு உலகிலும் பரப்பி விடுவான். அத்தாட்சி மற்றும் ஆதாரங்களின் அடிப்படையின் அவன் அவர்களுக்கு வெற்றியை வழங்குவான். அந்த நாட்கள் வருகின்றன. மாறாக, அருகில் உள்ளன. உலகில் இந்த ஒரு மார்க்கம் மட்டுமே இருக்கும். அது கண்ணியத்தோடு நினைவு கூரப்படும். இறைவன் இந்த மார்க்கம் மற்றும் ஜமாஅத்தில் மீது அசாதாரணமான அருள்களை பொழிவான். மேலும் இதை அழிக்க நினைக்கும் ஒவ்வொருவரையும் தோல்வியுறச் செய்வான். மேலும் இந்த வெற்றி என்றென்றும் இருக்கும். எதுவரை என்றால் கியாமத் வந்து விடும்.

(ரூஹானி கஸாயின் பாகம் 20 தஸ்கிரத்துஷ் ஷஹாததைன் பக்கம் 66)

## எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகள்

கண்ணியத்திற்குரியவர்களே! இப்போது நான் எனது சொற்பொழிவின் இரண்டாவது அம்சத்தின் பக்கம் வருகின்றேன். காலத்தின் அருமையைக் கருதி ஒரு சில எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகள் பற்றி குறிப்பிடுகின்றேன். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

كَتَبَ اللهُ لَأَغْلِبَنَّ أَنَا وَرُسُلِيْ அதாவது, நானும் எனது தூதரும் வெற்றி பெறுவோம் என அல்லாஹ் விதித்து விட்டான். மேலும், நபிமார்களின் எதிரிகள் தொடர்பாக إِنَّا مِنَ الْمُجْرِمِيْنَ مُنْتَقِمُوْنَ அதாவது, குற்றவாளிகளுக்கு நாம் தண்டனை வழங்காமல் விடுவதில்லை.

தனது இந்த நிலையான சட்டத்தின் கீழ் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு மாபெரும் வெற்றிகள் வழங்கிய அதே வேளையில் அன்னாரின் எதிரிகளின் அழிவு அவர்களின் தோல்வி மற்றும் அவர்கள் இழிவிற்கு ஆளாகுவது பற்றிய செய்தியையும் அறிவித்தான். அல்லாஹ் அன்னாருக்கு இல்ஹாம் மூலமாக கூறினான்:

إِنِّيْ مُهِيْنٌ مَنْ أَرَادَ إِهَانَتَكَ அதாவது, எவர் உம்மை இழிவுபடுத்த நினைப்பாரோ அவரை நான் இழிவுபடுத்துவேன். (தஸ்கிரா பக்கம் 27)

وَنُمَزِّقُ الْأَعْدَاءَ كُلَّ مُمَزَّقٍ அதாவது, நான் உனது எதிரிகளை துண்டு துண்டாக்கி விடுவேன். (தஸ்கிரா பக்கம் 550)

يَعْصِمُكَ اللهُ مِنَ الْعِدَا وَيَسْطُوْ بِكُلِّ مَنْ سَطَا அதாவது, அல்லாஹ் எதிரிகளிடம் இருந்து உம்மை பாதுகாப்பான். மேலும், உம்மை தாக்குகின்ற ஒவ்வொருவரின் மீதும் அல்லாஹ் தாக்குதல் தொடுப்பான். (தஸ்கிரா பக்கம் 558)

إِنَّ فِرْعَوْنَ وَهَامَانَ وَجُنُوْدَهُمَا كَانُوْا خَاطِئِيْنَ அதாவது, ஃபிர்அவ்ன் மற்றும் ஹாமான் அதாவது ஃபிர்அவ்ன் மற்றும் ஹாமானின் இயல்பை உடையவர்கள் மேலும், அவர்களோடு உள்ளவர்கள் அதாவது அவர்களின் படைகள் தவறில் உள்ளனர்.

إِنِّيْ مَعَ الْأَفْوَاجِ آتِيْكَ بَغْتَةً அதாவது, நான் அனைத்து படைகளோடு அதாவது மலக்குமார்களோடு அடையாளங்களை வெளிப்படுத்து –வதற்காக திடீரென உன்னிடத்தில் வருவேன். (தஸ்கிரா பக்கம் 494)

*(தொடரும்....)*

# எனது கைகளின் மூலமாக இஸ்லாத்தை எல்லா மார்க்கங்கள் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காகவே நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேன்

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### திருக்குர்ஆனின் சிறப்புகளையும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மகத்துவங்களையும் வெளிப்படுத்துவதற்காக என்னை இறைவன் இந்த பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அனுப்பியுள்ளான்

“இஸ்லாமிய பெரியார்களே! எல்லா பிரிவுகளை விடவும் அதிகமாக நல்ல எண்ணங்களை மேலான இறைவன் உங்களது உள்ளங்களில் உருவாக்குவானாக. மேலும், இந்த இக்கட்டான தருணத்தில் உங்களை தனது அன்பான மார்க்கத்தின் ஊழியர்களாக ஆக்குவானாக. நான் இந்த சமயத்தில் அல்லாஹ்வுக்காக மட்டும் இந்த அவசியமான விஷயம் தொடர்பாக தகவல் தெரிவிக்கின்றேன். இந்த குழப்பங்கள் நிறைந்துள்ள காலத்தில் திருக்குர்ஆனின் சிறப்புகளையும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மகத்துவங்களையும் நான் வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் எனக்கு வழங்கப்பட்டுள்ள அந்த ஒளிகள், அருள்கள், வழக்கத்திற்கு அப்பாற்பட்ட அடையாளங்கள், இறைவனிடமிருந்து நேரடியாக கிடைத்த அறிவு ஆகியவற்றின் உதவியினால் இஸ்லாத்தின் மீது தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கின்ற அந்த எல்லா எதிரிகளுக்கும் பதில் கூறுவதற்காகவும் மேலான இறைவன் என்னை தன் தரப்பிலிருந்து நியமித்தவாறு இந்த பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வலுவான இஸ்லாம் மார்க்கத்தை புதுப்பிப்பதற்காகவும் அதற்கு உதவி செய்வதற்காகவும் அனுப்பியுள்ளான்.” (பரக்காத்துத் துஆ பக்கம் 34, ரூஹானீ கஸாயின் தொகுதி 6)

### இறைவன் எனது எழுத்துக்களின் மூலமாக ஒவ்வொரு பிரிவின் மீதும் அத்தாட்சியை நிறைவடையச் செய்துள்ளான்

“எனக்கு هُوَالَّذِیۡۤ اَرۡسَلَ رَسُوۡلَهٗ بِالۡهُدٰی وَدِیۡنِ الۡحَقِّ لِیُظۡهِرَهٗ عَلَی الدِّیۡنِ کُلِّهٖ என்ற இந்த திருக்குர்ஆன் வசனம் இல்ஹாம் ஆக வந்து ஏறக்குறைய இருபது வருட காலம் கழிந்து விட்டது. எனது கைகளின் மூலமாக இறைவன் இஸ்லாத்தை எல்லா மார்க்கங்களின் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காகவே இறைவன் புறமிருந்து நான் அனுப்பப்பட்டுள்ளேன் என்று எனக்கு இந்த இல்ஹாமின் பொருள் புரிய வைக்கப்பட்டிருந்தது. மேலும், இது திருக்குர்ஆனிலுள்ள ஒரு மகத்தான முன்னறிவிப்பாகும் என்பதை இந்த இடத்தில் நினைவில் கொள்ள வேண்டும். இந்த முன்னறிவிப்பு வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கைகளால் நிறைவேறும் என்பது அது குறித்து ஆராய்ச்சியாளர்களான ஆலிம்கள் கொண்டுள்ள ஒருமித்த கருத்தாகும். எனக்கு முன்னர் தோன்றிய எந்த இறைநேசர்களும் பெரியார்களும் தம்மை மெய்ப்பிக்கக் கூடியதாக இருக்கின்றது என்று கூறவில்லை. மேலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசனம் எனக்கு சாதகமாக இருக்கின்றது என்று எனக்கு இல்ஹாம் வந்துள்ளது என்ற இந்த வாதத்தையும் அவர்கள் செய்யவில்லை. ஆனால் எனது காலம் வந்தபோது எனக்கு இது இல்ஹாம் ஆக வந்தது. மேலும், இந்த வசனத்தை மெய்ப்பிப்பவர் நீர்தான். மேலும் உமது கைகளாலேயே உமது காலத்தில்தான் மற்ற மார்க்கங்கள் மீது இஸ்லாம் மார்க்கத்திற்கு இருக்கும் மேன்மை நிரூபிக்கப்படும் என்று எனக்கு கூறப்பட்டிருக்கின்றது. இந்த இறைவனின் அற்புதம் சர்வ சமய மாநாட்டில் வெளிப்பட்டு விட்டது. இந்த மாநாட்டில் எனது சொற்பொழிவின்போது அதற்கு எதிரில் அனைத்து சொற்பொழிவு–களையும் நிகழ்த்திய ஒவ்வொரு பிரிவைச் சார்ந்தவருக்கும் விருப்புடனோ அல்லது வெறுப்புடனோ சந்தேகமின்றி இஸ்லாம் மார்க்கம் தனது சிறப்புகளுடன் ஒவ்வொரு மார்க்கத்தை விடவும் மேலோங்கி நிற்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியது வந்தது. பிறகு, இதுவே போதுமானது என்று கருதப்படவில்லை. மாறாக, இறைவன் எனது எழுத்துக்களின் மூலமாக ஒவ்வொரு பிரிவின் மீதும் அத்தாட்சியை நிறைவடையச் செய்துள்ளான்.”

(திர்யாக்குல் குலூப். ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் 252)

### எப்போதும் அவன் தனது தூதர்களுக்கு உதவி செய்து வந்திருப்பது போன்றே நிச்சயமாக இறைவன் எனக்கு உதவி செய்வான். எனக்கு எதிராக எவரும் நிற்க முடியாது

“நான் இந்த காலக்கட்டம் வரை ஏறக்குறைய 150 முன்னறிவிப்புகளை இறைவனிடமிருந்து பெற்று அவை மிகத் தெளிவாக நிறைவேறி விட்டதை சுயமே எனது கண்களால் கண்ட பிறகும் நபி அல்லது ரஸூல் என்ற பெயர்கள் என்னுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுவதை என்னால் எவ்வாறு மறுக்க முடியும்? மேலும் சுயமே இறைவனே இந்த பெயர்களை எனக்கு சூட்டியிருக்கும் போது அதை எவ்வாறு நான் மறுப்பேன்? அல்லது அவனை தவிர வேறு ஒருவருக்கு ஏன் அஞ்சுவேன்? எந்த இறைவன் என்னை அனுப்பினானோ எவன் மீது இட்டுக்கட்டிக் கூறுவது சாபத்திற்கு உரியவர்களின் வேலையோ அந்த இறைவன் மீது ஆணையாக! அவன் என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக ஆக்கி அனுப்பி இருக்கிறான். திருக்குர்ஆனின் வசனங்கள் மீது ஈமான் கொள்வதைப் போன்றே எவ்வகையிலும் அணுவளவு வித்தியாசமுமின்றி எனக்கு இறங்கிய இறைவனின் மிகத் தெளிவான வஹியின் மீது நான் ஈமான் கொள்கிறேன். அதன் உண்மை, அதன் தொடரான அடையாளங்களால் எனக்கு தெளிவாகி விட்டது. மேலும், எனக்கு இறங்கும் தூய வஹி ஹஸ்ரத் மூஸா, ஹஸ்ரத் ஈஸா மற்றும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) ஆகியோர் மீது தனது கூற்றை இறக்கிய அந்த இறைவனின் கூற்றேயாகும் என நான் கஅபத்துல்லாஹ்வில் நின்று ஆணையிட்டுக் கூற முடியும். எனக்காக வானமும் பூமியும் கூறின. ஆனால், முன்னறிவிப்பிற் கேற்ப நான் மறுக்கப்பட வேண்டியது அவசியமானதாக இருந்தது. ஏனென்றால் எவர்களது உள்ளங்களில் திரைகள் இருக்கின்றனவோ அவர்கள்

*(தொடர்ச்சி 12-வது பக்கம்....)*

# ஜுமுஆ பேருரை

**மார்ச் 23 அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வரலாற்றில் மிக முக்கியமான நாளாகும்.** ஏனென்றால், அந்த நாளில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் பைஅத்தின் மூலமாக முறையாக அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கான அடித்தளத்தை அமைத்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: தோன்றவிருந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி மேலும் எவரைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருந்தார்களோ அவர் நானே ஆவேன். மேலும் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஏகத்துவத்தை நிலைநாட்டி, உள்ளங்களில் இறை நேசத்தை உருவாக்கவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: எனக்கு இந்த உயர் தகுதியும், மேன்மையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதாலும் அன்னாரின் மீது நான் கொண்ட உண்மையான அன்பினாலும் கிடைத்துள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு உயர் தகுதியை வழங்குகின்றனர் எனக் கூறுபவர்கள் அநீதியிழைப்பவர்களாவர் - நவூதுபில்லாஹ்.

இந்த காலத்தில் மஸீஹ், மஹ்தி மற்றும் நீதி தீர்ப்பவர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களே ஆவார்கள். மேலும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி மற்றும் ஏகத்துவத்தை நிலைநாட்டுவது மற்றும் பூமியில் அல்லாமல் உள்ளங்களில் நிலைபெற வேண்டிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஆட்சியும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகவும் அன்னாரின் ஜமாஅத்தின் மூலமாகவும் மட்டுமே நிலைபெற முடியும். இதை தவிர்த்து எந்த வாளின் மூலமோ துப்பாக்கியின் மூலமோ அல்லது அதிகாரத்தின் மூலமோ அல்லது தீவிரவாதத்தைப் பரப்புவதன் மூலமாகவோ அல்லது இஸ்லாத்தின் பெயரால் அப்பாவி மக்களை கொன்று குவிப்பது மூலமாகவோ நிலைபெற முடியாது என்பது இந்த மக்களுக்கு புரிந்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆண்டு மாநாட்டில் 24 மார்ச் 2017 அன்று இலண்டனிலுள்ள **பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலிலுள்ள தாஹிர் ஹாலில்** M.T.A -வின் செயற்கைக்கோள் தொடர்புகள் மூலம் சய்யிதுனா அமீருல் முஃமினீன் **ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் நேரலை மூலமாக ஆற்றிய நிறைவு சொற்பொழிவு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَ رَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ ـ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ ـ الرَّحْمٰنِ الرَّحِيمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّينِ ـ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِينُ ـ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ـ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ـ

நேற்று மார்ச் 23 ஆம் தேதியாக இருந்தது. மார்ச் 23 அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வரலாற்றில் மிக முக்கியமான நாளாகும். ஏனென்றால், அந்த நாளில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் பைஅத்தின் மூலமாக முறையாக அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கான அடித்தளத்தை அமைத்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: தோன்றவிருந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி மேலும் எவரைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருந்தார்களோ அவர் நானே ஆவேன்.

மேலும் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஏகத்துவத்தை நிலைநாட்டி, உள்ளங்களில் இறை நேசத்தை உருவாக்கவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்.

ஐரோப்பா மற்றும் ஆசியா போன்ற பூமியின் பல்வேறு இடங்களில் வசிக்கும் மக்களில் நல்லியல்பு கொண்ட அனைவரையும் ஏகத்துவத்தின் பக்கம் ஈர்க்க வேண்டும் எனவும், தனது அடியார்களை ஒரே மார்க்கத்தின் கீழ் ஒன்று கூட்ட வேண்டும் எனவும் இறைவன் விரும்புகிறான். இதுவே இறைவனின் நோக்கமாகும். மேலும் இந்த நோக்கத்திற்காகவே நான் உலகிற்கு அனுப்பப்பட்டுள்ளேன்.

எனவே நீங்கள் இந்த நோக்கத்தைப் பின்பற்றுங்கள். ஆயினும் மென்மை, நல்லொழுக்கம் மற்றும் துஆவில் அழுத்தம் கொடுத்தவாறு பின்பற்ற வேண்டும். (அல் வஸிய்யத். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 306-307)

அடுத்து ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: எனக்கு இந்த உயர் தகுதியும், மேன்மையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதாலும் அன்னாரின் மீது நான் கொண்ட உண்மையான அன்பினாலும் கிடைத்துள்ளது.

எனவே, அந்த தூதர் (ஸல்) அவர்களின் மீது அன்பு கொள்ளுங்கள். அன்னாரைப் பின்பற்றுங்கள் என்று முழு உலகத்திற்கும் தூதுச் செய்தியாக உள்ளது. அதன் மூலம் இறைவனுடனும் உங்களுக்கு தொடர்பு ஏற்படும். மேலும் நீங்கள் உண்மையான ஏகத்துவவாதியாகவும் ஆக முடியும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆதமின் மக்களுக்கு முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர இப்போது எந்தத் தூதரும், பரிந்துரை செய்பவரும் இல்லை. எனவே ஆற்றலும் கம்பீரமுமிக்க அந்த தூதரிடம் உண்மையான அன்பு கொள்ள முயலுங்கள். அவரை தவிர வேறெவருக்கும் அவரை விட எவ்வகை மேன்மையும் வழங்காதீர்கள். இதனால் நீங்கள் விண்ணில் இரட்சிப்பு பெற்றவரக எழுதப்படுவீர்கள்.

மேலும் நினைவில் கொள்ளுங்கள். இரட்சிப்பு என்பது மரணத்திற்குப் பிறகு வெளிப்படுவதல்ல. மாறாக, இவ்வுலகில் தனது ஒளியைக் காட்டுவதே உண்மையான இரட்சிப்பாகும். இரட்சிப்பு கிடைக்கப் பெற்றவர் யார்? இறைவன் இருக்கின்றான் என்பது உண்மை என்றும், அவனுக்கும் அவனது படைப்பினங்களுக்கும் இடையே பரிந்துரை செய்பவர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஒருவரே என்றும், வானத்தின் கீழ் அம்மாநபிக்கு நிகரான தகுதியைப் பெற்ற தூதர் எவரும் இல்லை என்றும், திருக்குர்ஆனுக்கு நிகரான மறை வேறொன்றும் இல்லை என்றும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறெவரும் கொள்கையாலும், கோட்பாடாலும் நிரந்தரமாக உயிர் வாழ்வதை இறைவன் விரும்பவில்லை என்றும், உறுதியாக நம்புவரே இரட்சிப்புப் பெற்றவராவார். (கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 13-14)

இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்டிருந்த அன்பு மற்றும் மேன்மை ஆகும். இதனை எப்போதும் அன்னார் முழுமையாக வெளிப்படுத்தி வந்துள்ளார்கள். மேலும் தன்னை ஏற்றுக் கொண்டவர்களும், இந்த நேசம் மற்றும் கண்ணியத்தை தமது கருத்தில் கொள்ள வேண்டும் என அன்னார் அறிவுறுத்தி –யுள்ளார்கள். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு உயர் தகுதியை வழங்குகின்றனர் எனக் கூறுபவர்கள் அநீதியிழைப்பவர் –களாவர் –நவூதுபில்லாஹ்.

இன்றைய நாட்களில் அல்ஜீரியாவிலும் இந்த பழி சுமத்தப்படு –கின்றது. இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு அஹ்மதிகள் சிறையில் அடைக்கப்படுகின்றனர். பெண்கள் மீது கை வைக்கவும், வழக்கு தொடரவும் இவர்கள் தொடங்கி விட்டனர். பல மணி நேரங்கள் பயணம் செய்ய வைத்து பால்குடி குழந்தைகளுடன் தாய்மார்களை வேறு நகரங்களுக்கு அழைத்துச் சென்று வழக்கு தொடுக்கப்பட்டு சிறையில் அடைக்கின்றனர்.

ஆனால் எனக்கு அந்த பெண்களும் கூட இந்த தூதுச் செய்தியை அனுப்புகின்றனர். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். அன்னாரை ஏற்றுக் கொண்ட பிறகே எங்களுக்கு உண்மையான ஏகத்துவத்தைப் பற்றியும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மையான மதிப்பும், மரியாதையும், அன்னாரின் மீதான அன்பின் உண்மைத்தன்மையும் எங்களுக்கு தெரிய வந்துள்ளது. அவ்வாறிருக்க எங்களால் எவ்வாறு எமது ஈமானிலிருந்து விலகி நிற்க இயலும்?

அல்லாஹ்வே! இந்த அஹ்மதிகளுக்கு அவர்களின் நாடுகளில் எளிமையை ஏற்படுத்துவாயாக! என துஆ செய்கின்ற அதே தருணத்தில், அல்லாஹ்வே! முஸ்லிம்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியத்தை வழங்குவாயாக என்றும் நாம் துஆ செய்கின்றோம். அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப ஏகத்துவத்தை நிலைநாட்டவும், இஸ்லாத்தின் மறுமலச்சிக்காகவுமே அன்னார் தோன்றியுள்ளார்கள். அல்லாஹ்வின் மீதான அன்பு மற்றும் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்கான அன்னாரின் துடிப்பின் ஒரு பொலிவு இந்த சொற்களிலிருந்து நமக்கு கிடைக்கின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வை நோக்கிக் கூறுகின்றார்கள்: இறைவா! நீ பார்ப்பாயாக! பறவை தனது கூட்டினை நோக்கிப் பறந்து செல்வது போன்று எனது ஆன்மா உன்னை நோக்கி பறந்து வருகின்றது. எனவே உனது வல்லமையின் அடையாளத்திற்கு நான் விருப்பம் கொள்கின்றேன். ஆயினும் எனக்காகவோ எனது கண்ணியத்திற்காகவோ ஆசை கொள்ளவில்லை. மாறாக, மக்கள் உன்னை அடையாளங் கண்டு கொள்ள வேண்டும் என்பதற்காகவும், உனது தூய வழியினை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், நீ அனுப்பிய நபரை பொய்ப்படுத்தி மக்கள் நேர்வழியில் இருந்து விலகிச் சென்று விடக் கூடாது என்பதற்காகவுமே நான் அவ்வாறு ஆசை கொண்டேன். நீ என்னை அனுப்பியிருக்கிறாய்; எனக்கு ஆதரவாக மாபெரும் அடையாளங்களைக் காட்டியிருக்கிறாய் என நான் சாட்சி பகர்கிறேன். எந்த அளவுக்கென்றால் முன்னறிவிப்பிற்கேற்ப ரமலானில் குறிப்பிட்ட நாட்களில் கிரகணத்திற்குட்பட வேண்டும் என நீ சூரியனுக்கும் சந்திரனுக்கும் கட்டளையிட்டாய். நீயே எனது இறைவனாவாய் என நான் உன்னை அடையாளம் காண்கின்றேன். எனவே எனது ஆன்மாவானது பால்குடி குழந்தை தனது தாயைக் கண்டதும் துள்ளுவதைப் போன்று உனது பெயரைக் கேட்டதும் துள்ளிக் குதிக்கின்றது. ஆனால் பெரும்பாலான மக்கள் என்னை அடையாளம் காணவில்லை; என்னை ஒப்புக் கொள்ளவுமில்லை. (திர்யாகுல் குலூப். ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 511)

இந்தக் கூற்றிலிருந்து அல்லாஹ்வின் அன்பு மற்றும் அவனது மகத்துவத்தை நிலைநாட்ட அன்னாரிடம் காணப்பட்ட துடிப்பு நமக்கு தென்படுகிற அதே தருணத்தில் மனித இனத்தைக் காப்பாற்று –வதற்கான அன்னாரின் கடுமையான வேதனையும் நமக்கு தென்படுகின்றது. அவ்வாறு எப்படி இல்லாமல் இருக்க முடியும்? ஏனென்றால் அன்னார்தானே இறுதிக் காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் உள்ளங்களில் இறை அன்பை உருவாக்கக்கூடியவராக உள்ளார்கள்? இறை அன்பை பிறரின் உள்ளங்களில் நிலைநாட்டுபவராக மட்டும் இல்லாமல் அன்னாரும் இறை அன்பில் மூழ்கியவராகவே திகழ்ந்தார்கள். அல்லாஹ்வின் அன்பு மற்றும் நேசத்திற்கான நெருப்பின் பொறி பிறரின் உள்ளங்களிலும் ஏற்பட்டு விட வேண்டும் என்ற துடிப்பு எந்த அளவுக்கு அன்னாருக்கு இருந்ததென்றால் அது தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்:

தனது ஓர் இறைவன் இருக்கின்றான். அவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் படைத்தவன் ஆவான் என இதுவரை அறியாத மனிதன் மிகவும் துர்பாக்கியசாலி ஆவான். எமது சொர்க்கம் எமது இறைவனே! எமது பேரின்பங்கள் அனைத்தும் எமது இறைவனிடத்தில் உள்ளன. ஏனெனில் நாம் அவனைக் கண்டிருக்கிறோம். அவனிடத்தில் ஓர் அழகினைக் கண்டோம். இந்தச் செல்வம் உயிரைக் கொடுத்தேனும் பெறத்தக்கது. ஒருவன் தன்னை முற்றிலும் இழந்தாகிலும் பெறத்தக்கது இம்மாணிக்கம்! இழப்பிற்குள்ளானவர்களே! அந்த நீரூற்றின் பக்கம் விரைந்து ஓடுங்கள். அது உங்கள் தாகத்தைத் தணிக்கும். அது வாழ்வளிக்கும் நீரூற்றாகும். அது உங்களைக் காப்பாற்றும். நான் என்ன செய்வேன்? எவ்வாறு இந்த நற்செய்தியினை உள்ளங்களில் உறையச் செய்வேன்? இதுதான் உங்கள் இறைவன் என்று மக்கள் கேட்கும் பொருட்டு கடை வீதிகளில் எந்த முரசு கொண்டு அறிவிப்பு செய்வேன்? மக்கள் கேட்கும் பொருட்டு அவர்களின் காதுகள் திறக்க எந்த மருந்தைக் கொண்டு சிகிச்சை செய்வேன்? (கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 21-22)

பாருங்கள்! இந்த சொற்களின் மறைவில் எந்த அளவுக்கு வேதனை உள்ளது!! ஒவ்வொரு சொல்லிலும் வேதனையின் பல

அம்சங்கள் ஒளிந்திருக்கின்றன என்றே கூறவேண்டும். ஒவ்வொருவரும் தத்தமது அறிவு மற்றும் ஞானத்திற்கேற்ப அதன் ஆழத்திற்குச் செல்ல முடியும். ஆனால் தமது ஆற்றலுக்கேற்ப எந்த அளவிற்கு ஒரு நபர் அதன் ஆழத்தை அடைவாரோ அந்த அளவிற்கு ஆன்மீகத்தில் அசாதாரண உயர்வையும், முன்னேற்றத்தையும் பெறக்கூடியவராக அவர் திகழ்வார்.

அடுத்து இறைவணக்கம் மற்றும் இறைநேசத்திற் –கான அறிவுரை செய்தவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் இறைவனுக்கு உரியவர்களாக ஆகி விட்டால் அவன் உங்களுக்கே உரியவன் என்பதை உறுதியாக உணர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் தூங்கிக்கொண்டிருப்பீர்கள்; இறைவன் உங்களுக்காக விழித்திருப்பான். நீங்கள் எதிரியிடமிருந்து கவனமற்று இருப்பீர்கள். ஆனால் இறைவன் அவர்களை உற்று நோக்கிக் கொண்டிருப்பான். எதிரியின் சூழ்ச்சியை முறியடிப்பான். உங்களின் இறைவனிடத்தில் என்னென்ன வல்லமைகள் உள்ளன? என்பதை இதுவரை நீங்கள் அறியவில்லை. நீங்கள் அறிந்திருந்தால் உலகிற்காக உங்களை மிகவும் கவலைக்குள்ளாக்கும் ஒருநாள் கூட உங்களிடம் வந்திருக்காது. ஒரு கருவூலத்தை தன்னகத்தே கொண்டிருக்கும் ஒரு நபர், ஒரு பைசா தொலைந்து போனதால் அழுவாரா? கதறி கூப்பாடு போடுவாரா? தன்னை மாய்த்துக் கொள்ளத் துணிவாரா?

அடுத்து, இறைவன் உங்களின் ஒவ்வொரு தேவையின்போதும் உங்களுக்கு உதவி செய்பன் ஆவான். அந்த பொக்கிஷத்தை நீங்கள் அறிந்திருந்தால் உலகிற்காக நீங்கள் உங்களை ஒருபோதும் மாய்த்துக் கொள்ள மாட்டீர்கள். இறைவன் மிகவும் நேசத்திற்குரிய பொக்கிஷம் ஆவான். அவனை கண்ணியப்படுத்துங்கள். அவன் உங்களின் ஒவ்வோர் அடியிலும் உங்களின் உதவியாளனாவான். அவன் அன்றி நீங்கள் ஒன்றுமேயில்லை. உங்களின் காரணிகளும் திட்டங்களும் ஒரு பொருட்டே அல்ல.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்நிய சமுதாயத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றாதீர்கள். அவை முற்றிலும் காரணிகளால் தம்மை மாய்த்துக் கொண்டு விட்டன. உலகமும் பௌதீகத்தையும் தவிர்த்து அவர்களிடம் வேறெதுவுமில்லை. பாம்பு மண்ணைத் தின்பது போன்று அந்த சமுதாயங்கள் உலகியல் காரணிகளில் மூழ்கிக் கிடக்கின்றன. நாய்களும், நரிகளும் பிணங்களை உண்பதைப் போன்று அந்த சமுதாயங்கள் மரணித்தவற்றையே உணவாகக் கருதி நிற்கின்றன. அவர்கள் இறைவனிடமிருந்து வெகு தொலைவில் வீழ்ந்து கிடக்கின்றனர். நீங்கள் நடுநிலையுடன் காரணிகளைப் பயன்படுத்துவதை நான் உங்களுக்குத் தடை செய்யவில்லை. பணி செய்வதையும், பொருட்களைப் பயன்படுத்துவதையும், உலகியல் விஷயங்களைப் பயன்படுத்துவதையும் நான் தடுக்கவில்லை. மாறாக, நீங்கள் அந்நிய சமுதாயங்களைப்போன்று காரணிகளின் அடிமைகளாக மாறுவதையே நான் தடை செய்கிறேன். காரணிகளை உருவாக்குகின்ற இறைவனையே நீங்கள் மறந்து விடுவதைத்தான் நான் தடை செய்கிறேன். இந்தக் காரணிகளையும் உலகியல் பொருட்களையும் இறைவனே உருவாக்கித் தருகின்றான். எனவே நீங்கள் உங்களை அதில் மாய்த்துக் கொள்ளாதீர்கள். மாறாக, அதனை உங்களுக்கு உருவாக்கித் தருகின்ற இறைவனின் பக்கம் பாருங்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களுக்கு கண்கள் இருந்திருந்தால் இறைவன் மட்டுமே இருக்கின்றான். மற்றவை அனைத்தும் பொருளற்றவை என்பதை நீங்கள் கண்டு கொள்வீர்கள். (கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 21-22)

எனவே, இறைவனுடன் நமக்கு இந்த அளவிற்கு தொடர்பு இருக்க வேண்டும். அதனை நாம் அடைய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்கள் இந்த தரத்தை அடைய வேண்டும் என விரும்புகின்றார்கள். நான் தற்போது குறிப்பிட்டதுபோன்று ஏகத்துவத்தை நிலைநாட்டுகின்ற பொறுப்பும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான பொறுப்பும் ஹுஸூர் (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் காரணத்தால் தரப்பட்டுள்ளது. இந்த அன்பு மற்றும் நேசத்திற்கான காட்சி அன்னாரிடம் எங்ஙனம் தென்படுகிறது எனக் கேட்டால் அதற்கு ஏராளமான சம்பங்கள் உள்ளன.

ஒரு சம்பவத்தை அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: ஒரு முறை ஹுஸூர் (அலை) அவர்கள் மஸ்ஜித் முபாரக்கின் மேலே தனிமையில் உலாவிக் கொண்டிருந்தார்கள். அது மட்டுமல்லாமல் ஏதோ முணுமுணுத்தவாறு இங்குமங்கும் நடந்து கொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்லாமல் அன்னாரின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. ஹுஸூர் அவர்களுக்கு ஏற்பட்ட வேதனை என்ன? என்று அந்த நபர் கேட்ட போது ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்தின்போது ஹஸ்ஸான் பின் சாபித் எழுதிய கவிதையை நான் படித்துக் கொண்டிருந்தேன். அந்த கவிதை இதுவாகும்.

كُنْتَ السَّوَادَ لِنَاظِرِیْ     فَعَمِیَ عَلَيْكَ النَّاظِرُ
مَنْ شَاءَ بَعْدَكَ فَلْيَمُتْ     فَعَلَيْكَ كُنْتُ أُحَاذِرُ

அதாவது, இறைவனின் அன்பிற்குரிய தூதரே! நீங்கள் என் கண்ணின் கருவிழியாய்த் திகழ்ந்தீர்கள். இன்று உங்களது மரணத்தின் காரணமாக அது குருடாகி விட்டது. உங்களுக்குப் பிறகு இனி எவர் மடிந்தாலும் மடியட்டும். எனக்கோ உங்களது மரணத்தைப் பற்றிய அச்சமே ஆட்கொண்டிருந்தது; அது நிகழ்ந்தும் விட்டது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் இந்த கவிதையை படித்துக் கொண்டிருந்தபோது இந்த கவிதை எனது நாவில் இருந்து வெளிப்பட்டிருக்கக் கூடாதா என்ற எண்ணம் எனது உள்ளத்தில் எழுந்தது. இந்த கவிதையைப் படித்துக் கொண்டிருந்த போது அன்னாரின் கண்களில் இருந்து வழிந்தோடிய கட்டுக்கடங்காத கண்ணீர் அன்னாரின் உள்ளத்தின் நிலையை வெளிப்படுத்து –கின்றது. நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட நாம் உயர்ந்த அந்தஸ்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கி இருப்பதாக ஆட்சேபனை செய்யக்கூடிய எதிரிகள் அன்னாரின் இந்த அன்பு மற்றும் நேசத்திற்கு அருகில் கூட நெருங்க முடியாது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் அன்னாரின் இந்த உணர்வுப் பூர்வமான நிலையை மிக வேதனை நிறைந்த வகையில் படம்பிடித்து காட்டுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எல்லா விதமான கடினத்தையும் எதிர்கொண்டார்கள். அன்னாருக்கு எதிரில் எண்ணற்ற எதிர்ப்பின் புயல்கள் வீசின. அன்னார் எண்ணற்ற துன்பங்கள் மற்றும் வேதனைகளைக் கடந்தார்கள். அன்னார் மீது கொலை வழக்கு தொடரப்பட்டது. அன்பிற்குரியவர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் குழந்தைகளின் மரணத்தின் காட்சியைக் கூட அன்னார் கண்டார்கள். ஆனால் அன்னாருக்கு அருகில்

இருந்தவர்கள் அன்னாரின் முகத்திலும் கண்களிலும் உள்ளத்திலும் வேதனை வெளிப்பட்டதைக் கண்டதேயில்லை. ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அன்பின் வெளிப்பாட்டிற்கான இந்த சம்பவத்தின் போது அன்னாரின் கண்களில் கண்ணீர் வெள்ளம்போன்று பெருக்கெடுத்து ஓடியது. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரதே தய்யிபா பக்கம் 28-30) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீதான அன்பிற்கான காட்சிகள் அன்னாரின் எழுத்துக்களிலும் மல்ஃபூஸாத்திலும் ஏராளம் கிடைக்கின்றன.

ஓரிடத்தில் இஸ்லாத்தின் எதிரிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது எள்ளிநகையாடலை செவிமடுத்தபோது தனது உள்ளத்தின் நிலையை அன்னார் வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

நமது தூய தூதர் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்கு எதிராக இந்த மக்கள் செய்கின்ற எள்ளி நகையாடலை விட வேறெந்த விஷயமும் எனது உள்ளத்திற்கு வேதனையை ஏற்படுத்தியதில்லை. மனிதர்களில் சிறந்த மனிதர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நற்பண்புகளுக்கு எதிராக இவர்கள் செய்கின்ற வேதனை மிகுந்த ஏச்சுப் பேச்சுக்கள் எனது இதயத்தை மிகவும் காயப்படுத்தி விட்டன. இறைவன் மீது ஆணையாக! எனது அனைத்து சந்ததிகளும், சந்ததிகளின் சந்ததிகளும், எனது அனைத்து நண்பர்களும், உதவியாளர்களும் எனது கண்களுக்கு முன்னால் கொலை செய்யப்பட்டால், எனது கைகளும், கால்களும் துண்டிக்கப்பட்டால், என் கண் விழிகள் பிடுங்கி எறியப்பட்டால், எனது அனைத்து மகிழ்ச்சியும், வசதிவாய்ப்பும் என்னிடம் இருந்து பறிக்கப்பட்டு விட்டால் எனக்கு ஏற்படும் வேதனையை விட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது செய்யப்படும் அசுத்தமான தாக்குதல்களால் ஏற்படும் வேதனையே எனக்கு வலி மிகுந்ததாக இருக்கும்.

எனவே எங்களது விண்ணின் எஜமானனே! நீ எங்கள் மீது கருணை மற்றும் உதவியின் பார்வையை செலுத்துவாயாக! மேலும் எங்களுக்கு இந்த மாபெரும் சோதனையிலிருந்து இரட்சிப்பை வழங்கவாயாக! (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானி கஸாயின் தொகுதி 5 பக்கம் 15. அரபி சொற்றொடரின் உருது மொழியாக்கம் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள சீரத்தே தய்யிபாவின் பக்கம் 43-44 -ல் இடம்பெற்றுள்ளது)

இதுபோன்ற உணர்வை வெளிப்படுத்துகின்ற எவரும் உள்ளனரா? அன்பு மற்றும் நேசத்திற்கான வாதம் செய்பவர்கள் பலரும் உள்ளனர். கத்மே நுபுவ்வத் என்ற பெயரால் கொலையும் குழப்பமும் செய்பவர்கள் அதிகம் உள்ளனர். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்தை உலகம் ஏற்றுக் கொள்ளச் செய்ய அவர்கள் என்ன முயற்சி செய்துள்ளார்கள்? இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனை உலகில் பரப்ப அவர்கள் என்ன செய்துள்ளார்கள்? அன்னாரின் சொற்கள் வெறும் வாயளவிலான வாதமாக மட்டும் இருக்கவில்லை. மாறாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது அன்னாரின் அன்பு மற்றும் நேசத்திற்கான வாதம் அன்னாரின் உள்ளத்தின் குரல் மற்றும் அன்னாரின் ஒவ்வொரு சொல் மற்றும் செயலிருந்து நிரூபணமாகின்றது என அன்னாருடன் தொடர்பு கொண்டிருந்தவர்களும், ஏன் அந்நியர்களும் கூட சாட்சி பகர்ந்துள்ளனர்.

அந்த வகையில் அதனை வெளிப்படுத்தியவாறு அமிர்தசரஸின் வகீல் எனும் பெயர் கொண்டிருந்த அஹ்மதியல்லாதவர்களின் ஒரு பத்திரிகை அன்னாரின் மரணத்தின்போது இவ்வாறு எழுதியது: மிர்ஸா சாஹிபின் மரணம் என்பது அன்னாருடன் கடுமையான கருத்து வேறுபாடு கொண்டிருந்த போதிலும் முஸ்லிம்களுக்கு குறிப்பாக ஒளிமயமான சிந்தனை கொண்ட முஸ்லிம்களுக்கு அவர்களின் ஒரு மாபெரும் மனிதர் அவர்களை விட்டுப் பிரிந்து விட்டார் என்ற உணர்வை ஏற்படுத்தி விட்டது. மேலும் அத்துடன் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு எதிரான போட்டியில் அன்னாரின் இருப்புடன் தொடர்புடைய அழகு மிக்க இஸ்லாத்தின் தற்காப்பு என்பதும் முடிந்து விட்டது. தொடர்ந்து அந்த பத்திரிகை மிர்ஸா சாஹிபின் எழுத்துக்களும், நூல்களும் இன்று தனது கடமையைச் செய்து முடித்து விட்டன. அவை நமக்கு அன்னாரின் மேன்மை மற்றும் முக்கியத்துவத்தை உணரச் செய்து விட்டன. எதிர்காலத்தில் இஸ்லாத்தின் பாதுகாப்புப் பணி எந்த அளவுக்கு விரிவடைந்தாலும் மிர்ஸா சாஹிபின் இந்த எழுத்துக்களைப் புறந்தள்ளி விட்டு செய்வது என்பது இயலாத ஒன்றாகும். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள சீரத்தே தய்யிபா பக்கம் 45-46) அதாவது அன்னாரின் நூல்கள் இன்றி இஸ்லாத்தின் பாதுகாப்புப் பணி சாத்தியமேயில்லை.

எனவே, இஸ்லாம் அல்லாஹ்வின் இறுதி மார்க்கம் மற்றும் முழுமையான மார்க்கம் என்பதை நிரூபணம் செய்வதற்காகவே அன்னார் அனைத்தையும் செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதான அன்பின் காரணமாகவும், அன்னாரின் மேன்மையை உலகம் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காகவும், உலகிற்கு அதனை அறிவிப்பதற்காகவும் அன்னார் அதனை செய்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கே உண்மையான அந்தஸ்து உள்ளது என்பதையும் முஹம்மதிய மார்க்கத்தைப் போன்று வேறொரு மார்க்கம் இல்லை என்பதையும் மற்ற மார்க்கத்தினருக்கு அன்னார் வெளிப்படுத்திக் காட்டினார்கள். ஆட்சேபனை செய்யக் கூடியவர்கள் அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பின் வெளிப்பாட்டினைப் படிக்க வேண்டும். அதனை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இல்லையென்றால் மேலோட்டமான வெறும் ஆட்சேபனை என்பது அறிவீனத்தின் அடையாளமாக அமைந்து விடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நன்றியுணர்வுள்ள ஒரு மாணவனைப் போன்றும், நன்றியுணர்வுமிக்க தொண்டனைப் போன்றும் தன்னை எப்போதும் குறிப்பிட்டு வந்தார்கள். தமக்கு கிடைத்தவையெல்லாம் தமது எஜமானர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பு மற்றும் அன்னாரைப் பின்பற்றியதன் காரணமாகவே கிடைத்துள்ளது என்று அன்னார் கூறியுள்ளார்கள்.

இதனை வெளிப்படுத்தியவாறு அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு இறைவன் வஹி அறிவித்தான். அதன் பிறகு இஸ்ஹாக்கிற்கும், பின்னர் இஸ்மாயீலிற்கும், யஃகூபிற்கும், யூசுஃபிற்கும், மஸீஹ் இப்னு மர்யமிற்கும் இறைவன் வஹி அறிவித்தான். இவர்கள் அனைவருக்குப் பிறகு நமது நபி (ஸல்) அவர்களுக்கு எந்த அளவுக்கு இறைவன் வஹி அறிவித்தான் என்றால் அன்னார் மீது மிகவும் ஒளிமயமான மற்றும் தூய வஹியை இறக்கினான். அப்படிப்பட்ட அந்த இறைவன் மீது சத்தியம் செய்து கூறுகின்றேன்.

அவ்வாறே இறைவன் எனக்கும் அவனுடன் கலந்துரையாடு –கின்ற பாக்கியத்தை நல்கினான். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் காரணமாக மட்டுமே எனக்கு இந்த கண்ணியம் கிடைத்துள்ளது. நான் இன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சாராதவனாகவும் அன்னாரை நான் பின்பற்றாமலும் இருந்து, அனைத்து மலைகளின் அளவிற்கு எனது செயல்கள் இருந்திருந்தாலும் எனக்கு இறைவனுடன் உரையாடும்

பாக்கியம் ஒருபோதும் கிடைத்திருக்காது. (தஜல்லியாத்தே இலாஹிய்யா. ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 411-412) இந்த விஷயங்களை செவிமடுத்த பிறகும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஒருவர் ஆட்சேபனை செய்கின்றார் என்றால் அவர் அநீதி இழைப்பவரும், அறிவீனரும், குழப்பவாதியும் ஆவார். இது தவிர நாம் வேறொன்றும் கூறுவதற்கில்லை. அவர்கள் தம்மை, பெரும் பெரும் ஆலிம்கள் என்று கூறி வலம் வருகின்றனர். இனி அவர்களின் விவகாரம் இறைவனிடம் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் ஏகத்துவத்தை நிலைநாட்டுதல் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மேன்மையை தெளிவுபடுத்தி உலகை அன்னாரின் கொடியின் கீழ் கொண்டு வருதல் ஆகும். அத்துடன் அடியார்களுக்குரிய உரிமையை வழங்குதல் மற்றும் அல்லாஹ்வின் படைப்பினங்களின் மீதான அனுதாப அறிவை வழங்குதல் மேலும் அதன்படி மனித இனத்தை செயல்பட வைப்பதும் அன்னாரின் வருகையின் நோக்கமாகும். அதன் அடிப்படையில் அன்னார் பைஅத்தின் நிபந்தனைகளில் இந்த நிபந்தனையையும் சேர்த்துள்ளார்கள். இன்னும் சொல்லப்போனால் இரண்டு நிபந்தனைகள் நேரடியாக இதனுடன் தொடர்புடையவையாக உள்ளன.

நான்காவது நிபந்தனையில் அன்னார் கூறுகின்றார்கள்: இறைபடைப்பினங்களுக்கு பொதுவாகவும், முஸ்லிம்களுக்கு குறிப்பாகவும் எனது மனக்கிளர்ச்சியினால் எவ்வகையிலும் ஆகுமற்ற துன்பத்தைத் தரமாட்டேன் என பைஅத் செய்யக் கூடியவர் பைஅத் செய்கின்றார். மேலும், அவர் நாவினாலோ கைகளினாலோ வேறு வகையிலோ துன்பம் தரமாட்டேன் என்று உடன்படிக்கை செய்கின்றார். அடுத்து ஒன்பதாவது நிபந்தனையில் இவ்வாறு உள்ளது. இறைப் படைப்பினங்கள் மீதுள்ள அனுதாபத்தில் இறைவனுக்காக மட்டும் தொண்டாற்றுவதில் ஈடுபட்டு வருவேன். என்னால் இயன்றவரை எனக்கு வழங்கப்பட்ட எனது ஆற்றல்களைக் கொண்டு மனித இனத்திற்கு நன்மை செய்வேன். (இஸாலே அவ்ஹாம். ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 564)

இது தொடர்பாக இஸ்லாமிய போதனைகளைக் குறிப்பிட்டவாறு அன்னார் கூறுகின்றார்கள்: மார்க்கத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று, இறைவனுடன் அன்பு கொள்ளுதல்; மற்றொன்று, பிறரின் துன்பத்தை தனது துன்பமாகக் கருதும் அளவிற்கு மனித இனத்துடன் அன்பு காட்டி அவர்களுக்காக துஆ செய்வதாகும். (நஸீமே த.்.வத். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 464)

அடுத்து ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாமிய போதனையின் அடிப்படையில் இஸ்லாத்தின் அம்சங்கள் இரண்டு மட்டுமேயாகும் அல்லது இஸ்லாமிய போதனைகள் இரண்டு பெரிய போதனையை உள்ளடக்கியது என்று கூடக் கூறலாம். முதலாவது, இறைவனை அறிவதும் அவனிடம் அன்பு கொள்வதுமாகும். மேலும் அவனுக்கான உண்மையான கீழ்ப்படிதலில் தன்னை மாய்த்துக் கொள்வதாகும். கட்டுப்படுதல் மற்றும் அன்பிற்கான நிபந்தனைகளுக்–கேற்ப செயல்பட வேண்டும்.

அடுத்து ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: இரண்டாவது நோக்கம் என்னவென்றால், மனித இனத்திற்கான தொண்டு மற்றும் அனுதாபத்திற்காக தனது அனைத்து ஆற்றல்களையும் திறமைகளையும் செலவிடுவதும் அரசர் முதல் அடிமட்ட மனிதன் வரை தனக்கு நன்மை செய்த நபருடன் நன்றியுணர்வுடனும் அழகிய முறையிலும் நடந்து கொள்வதுமாகும். (துஹ்.்.பா கெய்ஸரிய்யா. ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 281)

இறைவன் மீதான அன்பிற்குப் பிறகு அவனது படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதற்கான போதனை இதுவேயாகும் அல்லது இறைவன் மீதான அன்பின் காரணத்தால் அவனது படைப்பினங்களுக்குரிய கடமைகளைச் செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்துவதாகும் என்று கூறலாம்.

இது தொடர்பான அன்னாரின் நிலை எப்படி இருந்தது? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள்? என்பதை விளக்கியவாறு ஓரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: நான் அனைத்து முஸ்லிம்களுக்கும், கிறித்தவர்களுக்கும், இந்துக்–களுக்கும், ஆரியர்களுக்கும் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். உலகில் எவரும் எனக்கு பகைவர் இல்லை. அதாவது நான் என்னை எதிர்க்கக்கூடிய எவரையும் கூட எனது பகைவராக நான் கருதுவதில்லை.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பாசமிக்க தாய் ஒருத்தி தன் குழந்தைகளை நேசிப்பதை விட அதிகமாக நான் மனித இனத்தை நேசிக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் அதைவிட அதிகமாக நேசிக்கிறேன். உண்மையைக் கொலை செய்யும் பொய்யான கொள்கைகளுக்கே நான் எதிரியாவேன். மனித இனத்தின் மீதான அனுதாபம் என் கடமையாகும். பொய், இணை–வைத்தல், கொடுமை போன்ற எல்லா வகையான தீய செயல்கள், நேர்மை யின்மை, அநியாயம், தீய ஒழுக்கம் ஆகியவற்றை வெறுத்து ஒதுக்குவது எனது கொள்கை ஆகும். (அர்பயீன். ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 344)

அடுத்து மேலும் விளக்கியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஒவ்வோர் உயிரினமும் தமது இனத்துடன் அன்பு கொள்வது வெளிப்படையாகும். எந்தளவுக்கு என்றால் சுயநலம் தோன்றாதவரை எறும்புகளும் எறும்புகளை நேசிக்கின்றன.

எனவே இறைவன் பக்கம் மக்களை அழைக்கும் நபரின் கடமை என்னவென்றால், அவர் பிறரை மிக அதிகமாக நேசிக்க வேண்டும். எனவே நான் எல்லாரையும் விட மனித இனத்தின் மீது மிக அதிகமாக நேசம் கொள்கிறேன். ஆயினும் அவர்களின் தீய செயல்கள் மற்றும் எல்லா வகையான அநீதிகள், தீமைகள் மற்றும் கிளர்ச்சிகளுக்கு எதிரியாவேன். நான் எந்தவொரு தனி நபருக்கும் எதிரியல்ல. எனவே எனக்கு வழங்கப்பட்டுள்ள சொர்க்கத்தின் அனைத்து அருட்கொடைகள் மற்றும் கருவூலங்களின் திறவுகோலை நான் பாசமிகு உணர்வுடன் மனித இனத்தின் முன் சமர்ப்பிக்கிறேன்.

எனக்கு கிடைத்துள்ள செல்வம் உண்மையில் எல்லா வகையான வைரம், தங்கம் மற்றும் வெள்ளியை விட மேலானதாகும். அதனை மிக எளிதாக கண்டறிந்து கொள்ள முடியும். அது அனைத்து வகையான தினார் மற்றும் நகைகளின் மீதான அரச நாணயத்தின் அடையாளம் ஆகும். அரச நாணயத்தின் அடையாளம் என்பதன் பொருள், என்னிடமுள்ள விண்ணின் சாட்சியங்கள் ஆகும். அவை வேறு எவரிடமுமில்லை. அது என்னை உண்மைப்படுத்துகின்றன. எனக்கு சாட்சி பகர்கின்றன.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அனைத்து மார்க்கங்களிலும் இஸ்லாமிய மார்க்கம் மட்டுமே உண்மையானதாகும் என்று எனக்கு கூறப்பட்டது. மேலும், திருக்குர்ஆனின் போதனைகள் எனக்கு கூறப்பட்டுள்ளது. திருக்குர்ஆனின் போதனைகள் மட்டுமே நம்பத்தகுந்ததும் மனிதக் கரம் படிவதிலிருந்து தூய்மையானதாகவும் உள்ளது என எனக்கு அறிவிக்கப்பட்டது. அனைத்து நபிமார்களிலும்

முழுமையான போதனை நல்கக்கூடியவர் மற்றும் உயர் தரமான நுட்பமான ஞானம் நிறைந்த போதனையை நல்கக்கூடியவர் தமது தூய முன்மாதிரிகளின் மூலமாக மனிதத்துவத்தின் சிறப்புகளை வெளிப்படுத்தக் கூடியவர் எமது தலைவரும் எமது எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மட்டுமேயாவார்கள் என எனக்கு கற்றுத் தரப்பட்டுள்ளது.

நான் அந்த இறைவன் புறமிருந்து வாக்களிக்கப் –பட்ட மஸீஹாகவும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியாகவும் உட்புற மற்றும் வெளிப்புற கருத்து வேறுபாடுகளுக்கு நீதி தீர்ப்பவராகவும் இருப்பதாக எனக்கு தூய வஹியின் மூலமாக கூறப்பட்டுள்ளது. எனக்கு மஸீஹ் மற்றும் மஹ்தி என பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு பெயர்களையும் எனக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சூட்டியுள்ளார்கள். பின்னர் இறைவனும் தனது நேரடியான வஹியின் மூலமாக இதே பெயரையே எனக்கு சூட்டியுள்ளான். அடுத்து இதுவே எனது பெயராக இருக்க வேண்டும் என்பது தற்போதைய காலத்தின் தேட்டமாகவும் உள்ளது. (அர்பயீன் எண் 1. ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 345)

அன்னார் இவ்விஷயங்களை வெறும் எழுதுவதற்காக மட்டும் கூறவில்லை அல்லது தமக்கு மனித இனத்தின் மீது அன்பு மிக அதிகமாக இருப்பதாக வெறும் வாதம் மட்டும் செய்யவில்லை. மாறாக அதற்கான செயல் ரீதியான வெளிப்பாடும் அன்னாரின் வாழ்க்கையில் நமக்கு காணக் கிடைக்கின்றது. ஒருபக்கம் தான், மஸீஹ் மற்றும் மஹ்தியாக தோன்றியிருப்பதாக அன்னார் வாதம் செய்கின்றார்கள். மேலும் அந்த வாதத்தின் உண்மைத்துவத்திற்கு சான்றாக அல்லாஹ் அடையாளங்களை வெளிப்படுத்தும்போது அதிலும் குறிப்பாக தண்டனையின் வடிவில் மக்களுக்கு அடையாளமாக அவை வெளிப்படும்போது அன்னார் நிம்மதியிழந்து விடுகின்றார்கள்.

அது தொடர்பாக நாம் பார்க்கின்றோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வீட்டின் ஒரு பகுதியில் வசித்து வந்த மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பிளேக் நோய் பரவி வந்த நாட்களில் ஒவ்வொரு நாளும் ஏராளமான மக்கள் அந்நோய்க்கு இரையாகி மடிந்து வந்தனர்.

மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு துஆ செய்வதை கேட்டேன். அதை செவியுற்று நான் மிகவும் ஆச்சரியத்திற்கு உள்ளானேன்.

மவ்லவி சாஹிப் கூறுகின்றார்கள்: அந்த துஆவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்த போது அன்னாரின் குரலில் எந்த அளவுக்கு வேதனை இருந்தது என்றால் அதை செவியுற்றவரின் உள்ளம் உருகி விட்டது. அதை செவியுற்றபோது வியக்கதக்க உணர்வுப்பூர்வமான நிலையில் மனிதனை அது ஆழ்த்தியது. ஒரு பெண் பிரசவ வலியால் துடிதுடிப்பது போன்று அன்னார் வேதனையுடன் மன்றாடினார்கள்; அழுதார்கள். அன்னார் செய்த துஆவை நான் மிகக் கவனமாகக் கேட்டேன். இறைப் படைப்பினங்கள் பிளேக் நோயின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்காக அன்னார் துஆ செய்து கொண்டிருந்தார்கள். இறைவா! இந்த மக்கள் பிளேக் நோயினால் அழிந்து விட்டால் பின்னர் உன்னை வணங்குபவர்கள் எவர்? என்று துஆ செய்தார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள சீரத்தே தய்யிபா பக்கம் 54)

எனவே சிந்தனை செய்யுங்கள். ஒரு முன்னறிவிப்பிற்கேற்ப எதிரிகளின் மீது அந்த தண்டனை இறங்கியது. ஆனால் அன்னார் அந்த தண்டனை நீங்குவதற்கு துஆ செய்கின்றார்கள். அந்த தண்டனை அகன்று விடும் பட்சத்தில் எதிரிகள் அன்னாருக்கு எதிராக கூச்சலிடுவதும் சாத்தியமாக இருந்தது. அன்னாரின் முன்னறிவிப்பு ஐயத்திற்கு உள்ளாகி இருக்கும். ஆனால் மனித இனத்தின் மீதான அனுதாபமானது அந்த தண்டனையை சகித்துக் கொள்ளவில்லை. இறைவா! இவர்களை தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக என அன்னார் துஆ செய்தார்கள். மேலும் ஈமானின் பாதுகாப்பிற்கு வேறொரு வழியைக் காட்டுவாயாக! என துஆ செய்தார்கள்.

அனுதாபம் காட்ட வேண்டிய தருணத்தில் அன்னார் அனுதாபம் காட்டவில்லை என அன்னாரின் எதிரிகள் கூட கூற முடியாது. அதற்கு அன்னாரின் வாழ்க்கையில் ஏராளமான சம்பவங்கள் நமக்கு கிடைக்கின்றன. ஒரு சம்பவத்தைக் கூறுகின்றேன்: மினாரத்துல் மஸீஹ் கட்டுமானப் பணி துவங்கியதும் இந்துக்கள் கூச்சலிட்டனர். இதன் மூலம் எங்களது குடும்ப பெண்களின் கண்ணியத்திற்கு குறைவு ஏற்படும் என்றனர். அதனை விசாரிப்பதற்கு அரசாங்கத்தின் சார்பாக ஒரு நீதிபதி வந்தார். அவரிடம் அனைத்து விளக்கமும் அளிக்கப்பட்டது. இது ஓர் அடையாளமாக காட்டப்படுகிறது. ஒளியூட்டப்படும்; இந்தப் பகுதி ஒளிமயமாக இருக்கம். பெண்களின் கண்ணியத்திற்கு எந்த வகையிலும் பாதிப்பு வராது. அது அவர்களின் குடும்ப பெண்களுக்கு பிரச்சனை என்றால் எங்கள் குடும்ப பெண்களுக்கும் பிரச்சனை ஏற்படும். எனவே குடும்ப பெண்களின் கண்ணியம் பாதிக்கும் என்பதெல்லாம் தவறான மற்றும் வீணான காரணங்களாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். நீதிபதியுடன் அங்கு லாலாபூட்டாமால் என்ற ஒருவரும் இருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவர் இங்கு காதியானில்தான் வசிக்கின்றார் என்று கூறினார்கள். இவர் எமது அண்டை வீட்டுக்காரர். இந்த ஊரைச் சார்ந்தவர். இவருக்கு தெரியும். நான் எப்போதும் அண்டை அயலார் மற்றும் படைப்பினங்களைக் கருத்தில் வைத்துள்ளேன். உங்களுடன் நிற்கும் இந்து முதியவரான லாலா பூட்டாமாலிடம் கேளுங்கள். இவருக்கு எனது உதவிக்கான தேவை ஏற்பட்டு நான் இவருக்கு உதவி செய்யாமல் இருந்த சந்தர்ப்பம் உண்டா? என்று கேளுங்கள் அல்லது எப்போதாவது இவருக்கு என் புறமிருந்து நன்மை கிடைப்பதற்கு நான் தடையாக இருந்துள்ளேனா?

அடுத்து இந்த லாலா சாஹிபிற்கு எனக்கு தீங்கிழைக்க சந்தர்ப்பம் கிடைத்து இவர் எனக்கு தீங்கிழைக்காமல் இருந்துள்ளாரா? என்றும் இவரிடம் கேளுங்கள். இவர் எப்பொழுதும் எனக்கு நஷ்டத்தையே ஏற்படுத்தி வந்துள்ளார். ஆனால் நானோ எப்பொழுதும் இவருக்கு நன்மையே செய்து வந்துள்ளேன். அந்நேரத்தில் நீதிபதியுடன் நின்று கொண்டிருந்த லாலா சாஹிபிற்கு இவ்விஷயத்தை மறுப்பதற்கான தைரியம் வரவில்லை. மாறாக வெட்கத்தின் வெளிப்பாடாக அவர் நின்று கொண்டிருந்தார். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள சீரத்தே தய்யிபா பக்கம் 61-63)

ஆக இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முன்மாதிரியாகும். பாதிப்பை ஏற்படுத்தியவருக்கும் கூட படைப்பினத்தின் மீதான அனுதாப உணர்வுடன் நன்மையே செய்தார்கள். மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி சாஹிப் எதிர்ப்பின் உச்சத்தை தொட்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

அவர்கள் மீது குஃப்ர் நிராகரிப்பிற்கான ஃபத்வா வழங்கினார். தஜ்ஜால் என பெயர் சூட்டினார் – நவூதுபில்லாஹ். அன்னாருக்கு எதிராக நாடு முழுவதும் வெறுப்பு மற்றும் பகைமையின் நெருப்பை மூட்டினார். ஆனால், ஒரு வழக்கில் அன்னாரின் வழக்கறிஞர் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் குடும்பத்தைப் பற்றி மனநெருடலுக்குக் காரணமாக அமையும் சில கேள்விகளைக் கேட்க முற்பட்டபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கண்டிப்புடன் அவ்வாறு செய்வதை தடுத்து விட்டார்கள். வக்கீல் மவ்லவி ஃபஸ்லுத்தீன் சாஹிப் அஹ்மதி அல்லாதவராக இருந்தார். மிர்ஸா சாஹிப் வினோதமான மனிதர். வினோதமான நற்பண்புகளுக்கு சொந்தக்காரார் என அவர் கூறி வந்தார். ஒரு நபர் அன்னாரின் கண்ணியம் மற்றும் உயிரின் மீது தாக்குதல் நடத்துகின்றார். அதற்குப் பகரமாக அந்த நபரின் சாட்சியை பலவீனப்படுத்த சில கேள்விகள் கேட்க முற்படும்போது நான் இதுபோன்ற கேள்விகளுக்கு அனுமதி தரமாட்டேன் எனக் கூறி உடனே என்னை தடுத்து விட்டார் என்று அவர் கூறுகின்றார்.

மவ்லவி முஹம்மது ஹுஸைன் அவர்களைப் பற்றி ஓர் அரபிக் கவிதையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

قَطَعْتَ وِدَادًا قَدْ غَرَسْنَاهُ فِي الصِّبَا وَلَيْسَ فُؤَادِيْ فِي الْوِدَادِ يُقَصِّرُ

அதாவது, நீர் இந்த அன்பின் மரத்தை உமது கரத்தாலேயே வெட்டி விட்டீர். இளமை பருவத்தில் நாம் எமது உள்ளத்தில் வளர்த்து வைத்திருந்த அன்பின் மரத்தை நீர் உமது கரங்களாலேயே வெட்டி விட்டீர். ஆனால், எனது உள்ளம் எந்நிலையிலும் அன்பு மற்றும் நேசத்தின் விவகாரங்களில் தவறிழைக்கக் கூடியதல்ல. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள சீரத்தே தய்யிபா பக்கம் 57-59)

இது ஓர் உதாரணமாகும். அன்னாரின் பிராசாரத்தை அழிப்பதற்கு எண்ணற்ற முஸ்லிம் ஆலிம்கள் முயற்சி செய்தனர். பெயர் தாங்கி ஆலிம்கள் அன்னாரை எதிர்த்தார்கள். அன்னார் மீது குஃப்ர் ஃபத்வா வழங்கப்பட்டது. இப்போது வரை வழங்கி வருகின்றனர். அதன் விளைவாக இன்று வரை முஸ்லிம் நாடுகளிலும் ஏனைய உலக நாடுகளிலும் நமக்கு எதிர்ப்பு ஏற்படுகின்றது. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனையின் தாக்கத்தின் காரணமாகவே நாம் எதிரிகளின் ஏச்சுப் பேச்சுகளுக்கு எதிரில் நமது நல்லொழுக்கத்தின் தரத்தை கைவிட்டு விடுவதில்லை. சட்டத்தையும் நாம் கையில் எடுப்பது கிடையாது.

இந்த காலத்தில் மஸீஹ், மஹ்தி மற்றும் நீதி தீர்ப்பவர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களே ஆவார்கள். மேலும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி மற்றும் ஏகத்துவத்தை நிலைநாட்டுவது மற்றும் பூமியில் அல்லாமல் உள்ளங்களில் நிலைபெற வேண்டிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஆட்சியும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகவும் அன்னாரின் ஜமாஅத்தின் மூலமாகவும் மட்டுமே நிலைபெற முடியும். இதை தவிர்த்து எந்த வாளின் மூலமோ துப்பாக்கியின் மூலமோ அல்லது அதிகாரத்தின் மூலமோ அல்லது தீவிரவாதத்தைப் பரப்புவதன் மூலமாகவோ அல்லது இஸ்லாத்தின் பெயரால் அப்பாவி மக்களை கொன்று குவிப்பது மூலமாகவோ அது நிலைபெற முடியாது. இதனை இன்றைய முஸ்லிம்கள் புரிந்திருக்க வேண்டுமே!

ஐரோப்பாவில் இஸ்லாத்தின் பெயரால் தனி நபர் அல்லது அமைப்புகள் நடத்துகின்ற தாக்குதலாக இருக்கட்டும் அல்லது இங்கு இலண்டனில் இரண்டு நாட்களுக்கு முன்பு அநியாயமாக அப்பாவிகள் கொலை செய்யப்பட்டார்கள். சாலையில் சென்ற பாதசாரிகள் மீது காரை ஏற்றி விட்டனர். காவல் துறையைச் சார்ந்தவரும் கொலை செய்யப்பட்டார். இந்த பெயர் தாங்கி ஆலிம்கள் தவறாக வழி நடத்தி முஸ்லிம்களின் உள்ளங்களில் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை உரையச் செய்வதற்கு பகரமாக அநீதி மற்றும் காட்டுமிராண்டித் –தனமான எண்ணங்களை அவர்களின் உள்ளங்களில் உருவாக்கி விட்டனர். இதன் காரணமாகவே இந்த சம்பவங்கள் நிகழ்கின்றன.

எனவே இதுபோன்ற சூழலில் நான் எப்போதும் கூறி வந்துள்ளேன். இப்போதும் கூறுகின்றேன். இஸ்லாத்தின் அழகை உலகிற்கு முன் எடுத்து வையுங்கள். இது அஹ்மதிகளாகிய உங்களின் பொறுப்பாகும். அஹ்மதியத்தின் எதிர்ப்பைப் பற்றிய கேள்வியைப் பொருத்தவரை இவர்களால் அஹ்மதிய்யத்திற்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை வெற்றி பெறச் செய்வதற்காகவே அனுப்பியுள்ளான். இனி இஸ்லாம் அன்னாரின் மூலமாகவே பரவும். எனவே நாம்தான் இஸ்லாத்தைப் பரப்ப வேண்டும். அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்ற இந்த செயல்களுக்கு நாம் கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும். இதற்கெதிரில் குரல் எழுப்ப வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதும் நமது பணியாகும்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: முழு உலக மக்களே! நன்றாக கேட்டு கொள்ளுங்கள். இது பூமியையும் வானத்தையும் படைத்த இறைவனின் முன்னறிவிப்பாகும். அவன் இந்த ஜமாஅத்தை முழு உலகிலும் பரப்பி விடுவான். சான்றுகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் அனைவரின் மீதும் இதற்கு மேன்மையை வழங்குவான். அந்த நாள் வரவுள்ளது. மாறாக அது மிக அருகில் உள்ளது. உலகில் கண்ணியத்துடன் நினைவு கூறப்படும் மார்க்கம் இதுவாகவே இருக்கும். இறைவன் இந்த மார்க்கம் மற்றும் அமைப்பிற்கு அசாதாரண அருள் மற்றும் பரக்கத்துகளை வழங்குவான். இதனை அழிக்க விரும்பும் ஒவ்வொருவரையும் தோல்வியுறச் செய்வான். இந்த வெற்றி கியாமத் வந்து விடும் வரை நிலைபெற்றிருக்கும். இன்று இவர்கள் என்னை எள்ளி நகையாடுகின்றனர் என்றால் அதனால் என்ன நஷ்டம் ஏற்பட்டு விடும்? ஏனென்றால் ஏளனம் செய்யப்படாத எந்தத் தூதரும் தோன்றவில்லை. எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹும் ஏளனம் செய்யப்படுவது அவசியமானதாகும்.

يٰحَسْرَةً عَلَى الْعِبَادِ مَا يَأْتِيْهِمْ مِّنْ رَّسُوْلٍ اِلَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ என்று இறைவனே கூறுகின்றான். எனவே இது இறைவன் புறமிருந்து வெளிப்பட்ட அடையாளமாகும். ஒவ்வொரு நபியுடனும் எள்ளிநகையாடப் –படுகின்றது. ஆனால் அனைத்து மக்களின் கண்ணெதிரில் விண்ணில் இருந்து ஒருவர் இறங்கினால் வானவர்களும் அவருடன் இருக்கும் பட்சத்தில் அத்தகைய நபரை யார்தான் எள்ளிநகை –யாடுவார்? எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் விண்ணிலிருந்து இறங்குவார் என்பது வெறும் பொய்யான கற்பனையாகும் என்பதை இந்த ஆதாரத்தின் மூலமாகவும் அறிவுடைய மனிதனால் புரிந்து கொள்ள முடியும்.

நினைவிற் கொள்ளுங்கள்! எவரும் விண்ணில் இருந்து இறங்கி வரமாட்டார். தற்போது உயிருடன் உள்ள நமது அனைத்து எதிரிகளும் மரணித்து விடுவர். ஆயினும் அவர்களில் எவரும் மர்யமின் மகன் ஈஸா விண்ணிலிருந்து இறங்குவதைக் காணமாட்டார். அடுத்து அவர்களுக்குப் பிறகு எஞ்சியிருக்கும் அவர்களின் சந்ததிகளும் மரணித்து விடுவர். அவர்களில் எவரும் மர்யமின் மகன் ஈஸா விண்ணில் இருந்து இறங்குவதைக் காணமாட்டார். அடுத்து சந்ததிகளின் சந்ததிகளும் மரணித்து விடுவர். ஆயினும் அவர்களில்

எவரும் மர்யமின் மகன் ஈஸா விண்ணிலிருந்து இறங்குவதைக் காண இயலாது. அப்போது இறைவன் அவர்களின் உள்ளங்களில் பதற்றத்தை ஏற்படுத்துவான். சிலுவை மேலோங்குதலுக்கான காலமும் கழிந்து விட்டது. உலகமோ வேறு வடியில் வந்து விட்டது. ஆயினும் இதுவரை மர்யமின் மகன் ஈஸா விண்ணிலிருந்து இறங்கவில்லையே என பதற்றமடைவர். அப்போது அறிவு படைத்த மக்கள் இக்கொள்கையை முற்றாக கைவிட்டு விடுவர். இன்றைய நாளிலிருந்து மூன்று நூற்றாண்டு கழிந்திருக்காது. அப்போது ஈஸாவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் வெகுவாக நம்பிக்கையிழந்து நிராசையடைந்து இந்த பொய்யான கொள்கையை விட்டு விடுவர். உலகில் ஒரே மார்க்கம் மட்டுமே இருக்கும். ஒரு தலைவர் மட்டுமே இருப்பார். நான் விதை விதைக்கவே வந்துள்ளேன். எனவே எனது கரத்தால் அந்த விதை விதைக்கப்பட்டு விட்டது. இனி அது வளரும்; மலரும். அதை எவராலும் தடுக்க முடியாது. (தஸ்கிரத்துஷ் ஷஹாததைன். ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 66-67)

அல்லாஹ்வின் அருளால் மஸீஹால் விதைக்கப்பட்ட அந்த விதை வளர்ந்து மலர்ந்து பரவி வருகிறது. நாம் அதன் பசுங்கிளைகளாக மாற வேண்டும் என்றால், நமது பணி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களிலிருந்து கூறப்பட்டது போன்று அல்லாஹ்வின் மீதான அன்பு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது நேசம் மற்றும் சக மனிதர்கள் மீதான அனுதாபம் ஆகியவை நமது ஒவ்வொரு செயலிலும் வெளிப்பட வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான பாக்கியத்தை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

*(4-வது பக்கத்தின் தொடர்ச்சி....)*

ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எப்போதும் அவன் தனது தூதர்களுக்கு உதவி செய்து வந்திருப்பது போன்றே நிச்சயமாக இறைவன் எனக்கு உதவி செய்வான். எனக்கு எதிராக எவரும் நிற்க முடியாது.'' (ஒரு தவறான எண்ணம் அகற்றப்படுகிறது பக்கம் 3 ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 210)

## இறைவன் இக்காலத்தின் சீர்திருத்தத்திற்காக என்னை அனுப்பியுள்ளான்

''நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் உலகிலிருந்து வாரிசு இல்லாதவர்களாக சென்று விடுகின்றனர் என்ற உண்ணம் ஒருபோதும் சரியானதல்ல. இப்போது அவர்கள் தொடர்பாக கூறப்படும் எந்தவொரு கருத்திற்கும் கதையைப் படிப்பதை விட அதிகமாக சிறிதளவு கூட நம்பகத்தன்மை இருக்காது. ஆனால் ஒவ்வொரு நூற்றாண்டிலும் தேவைக்கேற்ப அவர்களின் வாரிசுகள் உருவாகிக் கொண்டேயிருப்பர். மேலும், இந்த நூற்றாண்டில் இந்த எளியவன் இருக்கின்றேன். இறைவனின் குறிப்பான உதவி இல்லாமல் முஸ்லிம்களின் எண்ணங்களிலிருந்து வெளியேற முடியாத அந்த தவறுகள் வெளியேற்றப்படுவதற்கும் மறுப்பவர்களுக்கு உண்மையான உயிருள்ள இறைவனுக்கான ஆதாரத்தை தருவதற்கும் இஸ்லாத்தின் மகத்துவத்தையும் உண்மையையும் புத்தம்புது அடையாளங்கள் மூலமாக நிரூபித்துக் காட்டுவதற்கும் இக்காலத்தின் சீர்திருத்தத்திற்காக இறைவன் என்னை அனுப்பியுள்ளான். இதுவே நடைபெற்று வருகின்றது. திருக்குர்ஆனின் ஞானங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இறைவனின் வார்த்தைகளின் நுட்பமான கருத்துக்களும் உண்மைகளும் திறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வானத்து அடையாளங்களும் வழக்கத்திற்கு அப்பாற்பட்டவையும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், இஸ்லாத்தின் அழகுகள், ஒளிகள், அருள்கள் ஆகியவற்றின் புதிய வடிவங்களின் தோற்றத்தை இறைவன் காட்டிக் கொண்டிருக்கின்றான். பார்க்கின்ற கண்களை உடையவர்கள் பார்க்கட்டும். உண்மையான உணர்வை உடையவர்கள் வேண்டட்டும். அல்லாஹ்வின் மீதும் தூதர் மீதும் அணுவளவு அன்பு கொண்டவர்கள் எழட்டும். மேலும் சோதித்துப் பார்க்கட்டும். எதன் அடிக்கல்லை இறைவன் தனது தூய கைகளால் வைத்துள்ளானோ அந்த இறைவனுக்கு விருப்பமுள்ள ஜமாஅத்தில் அவர்கள் இணைந்து விடட்டும்.'' (பரகாத்துத் துஆ. ரூஹானீ கஸாயின் தொகுதி 6 பக்கம் 24)

## எனக்கு இறைவன் திருக்குர்ஆனின் அறிவை வழங்கியுள்ளான். தனது வேதத்தின் உண்மைகளையும் தத்துவங்களையும் எனக்கு திறந்து தந்துள்ளான்

''இறுதியாக நான் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அறிவுரையாகக் கூறுகிறேன். இஸ்லாத்திற்காக விழித்தெழுங்கள். இஸ்லாம் கடுமையான சோதனையில் ஆழ்ந்திருக்கின்றது. அதற்கு உதவி செய்யுங்கள். இப்போது அது ஏழ்மையாக இருக்கிறது. மேலும், நான் இதற்காகவே வந்துள்ளேன். எனக்கு இறைவன் திருக்குர்ஆனின் ஞானத்தை வழங்கியுள்ளான். தனது வேதத்தின் உண்மைகளையும் தத்துவங்களையும் எனக்குத் திறந்து கொடுத்திருக்கின்றான். மேலும் எனக்கு வழக்கத்திற்கு அப்பாற்பட்டவற்றை வழங்கியிருக்கின்றான். எனவே நீங்களும் இந்த அருட்கொடையிலிருந்து பங்கு பெறும் பொருட்டு என் பக்கம் வாருங்கள். எவன் கையில் என் உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேன். இப்படிப்பட்ட மிகப்பெரும் குழப்பங்களைக் கொண்ட நூற்றாண்டின் துவக்கத்தில் – அதன் மிகவும் தெளிவான ஆபத்துகள் இருக்கும்போது ஒரு முஜத்தித் (சீர்திருத்தவாதி) மிகத் தெளிவான வாதத்துடன் வருவது அவசியம் இல்லையா? எனவே எனது பணிகளின் மூலமாக கூடிய விரைவில் நீங்கள் என்னை அடையாளம் கண்டு கொள்வீர்கள். இறைவன் புறமிருந்து வந்திருந்த ஒவ்வொருவரது வழியிலும் அக்கால ஆலிம்களின் புரியாத நிலைமையே தடையாக இருந்திருக்கின்றது. இறுதியில் அவர் அடையாளங் கண்டு கொள்ளப்பட்டார் என்றால் தமது பணிகளினாலேயே அவர் அடையாளங்கண்டு கொள்ளப்பட்டார். அதாவது கசப்பான மரத்தால் இனிமையான பழங்களைக் கொண்டு வர முடியாது. தனது சிறப்பான அடியார்களுக்கு தரப்படுகின்ற அருள்களை இறைவன் மற்றவர்களுக்கு தரமாட்டான். மக்களே! இஸ்லாம் மிகவும் பலவீனமாகி விட்டது. மேலும் மார்க்கத்தின் எதிரிகள் நாலாபுறமும் முற்றுகையிட்டுள்ளனர். மூவாயிரத்திற்கும் அதிகமான ஆட்சேபனைகள் ஒன்று திரட்டப்பட்டிருக்கின்றன. அத்தகைய தருணத்தில் அனுதாபத்துடன் நடந்து கொண்டவாறு உங்களது ஈமானை வெளிப்படுத்திக் காட்டுங்கள். மேலும் இறைவனின் வீரர்களின் இடத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். والسلام على من اتبع الهدى – நேர்வழியைப் பின்பற்றுபவர் மீது சாந்தி நிலவட்டுமாக.''

(பரக்காத்துத் துஆ. ரூஹானீ கஸாயின் தொகுதி 6 பக்கம் 36)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளாத மக்களின் உதாரணம்

நீங்கள் இமாம் மஹ்தியைக் கண்டால் அவருக்கு எனது ஸலாத்தை எட்ட வையுங்கள் என்பது பெருமானார் (ஸல்) அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ள கட்டளையாகும். இன்னொரு நபிமொழியில் பனிமலைகளில் முழங்கால்களால் தவழ்ந்து தவழ்ந்து அவரிடம் செல்ல நேரிட்டாலும் அவ்வாறு சென்று அவரிடம் பைஅத் செய்ய வேண்டும் என்று வந்துள்ளது. ஆலிம்கள் என்று தங்களைக் கூறிக் கொள்பவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் மிகவும் முக்கியமான இந்த கட்டளைகளை தங்களது முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டனர். வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு பெருமானார் (ஸல்) அவர்களின் ஸலாத்தை எட்ட வைப்பதற்குப் பகரமாக மிகவும் மோசமாக அன்னாரை அவர்கள் எதிர்த்தனர். இவர்களின் உதாரணத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கடுமையான பசியில் இருக்கும் ஒரு நபருடன் ஒப்பிட்டுக் கூறுகின்றார்கள். அந்த நபருக்கு முன்னால் எல்லா வகையான அருட்கொடைகளாலும் நிரம்பியுள்ள உணவு விரிப்பு இருந்தும் கூட அதை உதறித் தள்ளி விட்டு பசியால் அவர் அழிந்து விடுகின்றார்.

இதைப் பற்றி அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: பதினான்காம் நூற்றாண்டிலும் கூட இருபத்தி இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. நாம் வாதம் செய்துள்ள காலக்கட்டம் எந்த அளவு நீளமானதாக ஆகி விட்டது என்றால், எனது வாதத்தின் ஆரம்பக் காலக்கட்டத்தில் வயிற்றிலிருந்த மக்களின் சந்ததிகள் கூட இப்போது இளைஞர்களாக ஆகி விட்டனர். ஆனால் இப்போதும் கூட நான் உண்மையாளன் என்பது உங்களுக்குப் புரியாமல் இருப்பது வருத்தத்திற்குரியதாகும். எங்களது ஹதீஸ்களில் முப்பது பொய்யர்கள் வருவார்கள் என்று எழுதப்பட்டிருப்பதால் நாங்கள் உம்மை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்பதையே அவர்கள் மீண்டும் மீண்டும் கூறுகின்றனர்.

பாக்கியமற்ற சமுதாயமே! உங்களது பங்கில் தஜ்ஜால் மட்டும் தான் இருக்கின்றனரா என்ன? எவ்வாறு ஒரு வயலை இரவு நேரத்தில் அந்நியர்களின் விலங்குகள் வந்து அழித்து விடுகின்றதோ அவ்வாறே எல்லா தரப்பிலிருந்தும் நீங்கள் அழிக்கப்படுகின்றீர்கள். உங்களது உட்புற நிலைமைகளும் கூட மிகவும் மோசமாகி விட்டது. மேலும், வெளிப்புற தாக்குதல்களும் அதன் உச்சத்தை அடைந்து விட்டது. ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முஜத்தித்துகள் (சீர்திருத்தவாதிகள்) வந்து கொண்டிருந்தனர் என்ற விஷயம் ஒருவேளை இறைவனுக்கு மறந்து விட்டது போலும். (நவூதுபில்லாஹ்) அதாவது, இந்த முறை எவராவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் வந்துள்ளார் என்றால் உங்களது கூற்றிற்கு ஏற்ப ஒரு தஜ்ஜால்தான் வந்துள்ளார். நீங்கள் மண்ணோடு கலந்து விட்டீர்கள். இறைவன் உங்களைப் பற்றி அக்கறை காட்டவில்லை. நீங்கள் பித்அத்துகளில் மூழ்கி விட்டீர்கள். ஆனால், இறைவன் உங்களுக்கு வழிகாட்டவில்லை. உங்களிடமிருந்து ஆன்மீகம் சென்று விட்டது. உண்மை மற்றும் தூய்மையின் மனம் உங்களிடம் இல்லை. உண்மையைக் கூறுங்கள். இப்போது உங்களிடம் ஆன்மீகம் எங்கு இருக்கின்றன? இறைவனுடன் உள்ள தொடர்புகளுக்கான அடையாளங்கள் உங்களிடம் எங்கு இருக்கின்றன? இறைவனுடன் உள்ள தொடர்புகளுக்கான அடையாளங்கள் உங்களிடம் எங்கு இருக்கின்றன? உங்களது பார்வையில் மார்க்கம் என்றால் என்ன? அது நாவிலுள்ள தந்திரங்கள், தீங்கு கலந்திருக்கும் சண்டைகள், காழ்ப்புணர்வின் எழுச்சி மற்றும் குருடர்கள் போன்று தாக்குதல் நடத்துதல் ஆகியவை மட்டுமேயாகும். இறைவன் புறமிருந்து ஒரு நட்சத்திரம் வெளிப்பட்டது. ஆனால், நீங்கள் அதனை அடையாளங் கண்டு கொள்ளவில்லை. மேலும், நீங்கள் இருளைப் பின்பற்றிச் சென்றீர்கள். எனவே இறைவன் உங்களை இருளிலேயே விட்டு விட்டான்.

இப்போது இந்த நிலைமையில் உங்களுக்கும் அந்நிய சமுதாயங்களுக்குமிடையில் என்ன வித்தியாசம் இருக்கின்றது? ஒரு குருடர், குருடர்களுக்கு மத்தியில் அமர்ந்தவாறு உங்களது நிலைமையை விட எனது நிலைமை சிறந்ததாகும் என்று கூற முடியுமா என்ன? அறிவற்ற சமுதாயமே! நான் உங்களை யாருடன் ஒப்பிட்டுக் கூறுவேன்? நீங்கள் அந்த பாக்கியமற்றவர்களுக்கு ஒப்பானவர்களாக இருக்கின்றீர்கள். அவர்களது வீட்டிற்கு அருகில் ஒரு வள்ளல் ஒரு தோட்டத்தை அமைத்தார். அதில் எல்லா வகையான கனி தரக்கூடிய மரங்களை நட்டார். அதற்குள் ஓர் இனிமையான ஆறை ஓடச் செய்தார். அதன் தண்ணீர் மிகவும் இனிமையாக இருந்தது. மேலும், அந்த தோட்டத்தில் பெரும் பெரும் நிழல் தரக்கூடிய மரங்களை அவர் நட்டார். அவை ஆயிரக்கணக்கான மனிதர்களை வெயிலிலிருந்து காப்பாற்ற முடியும். அப்போது அந்த வள்ளல் வெயிலில் நடந்து சென்று கொண்டிருந்த அந்த சமுதாயத்தை அழைத்தார். அவர்களிடம் எந்த நிழலும் இருக்கவில்லை. கனியும் இருக்கவில்லை. தண்ணீரும் இருக்கவில்லை. அவை இருந்திருந்தால் அவர்கள் நிழலில் அமர்ந்து கனியைச் சாப்பிட்டு தண்ணீரை அருந்தி இருப்பார்கள். ஆனால், அந்த பாக்கியமற்ற சமுதாயம் அந்த வள்ளலின் அழைப்பை ஏற்க மறுத்து விட்டது. மேலும், அந்த வெயிலில் வெப்பத்தின் கடுமை, தாகம் மற்றும் பசியின் காரணமாக அது மரணித்து விட்டது. எனவே, அவர்களின் இடத்தில் நான் வேறு ஒரு சமுதாயத்தைக் கொண்டு வருவேன். அது இந்த மரங்களின் குளிர்ச்சியான நிழலின் கீழ் அமரும். இந்த பழங்களைச் சாப்பிடும். இந்த இனிமையான தண்ணீரை அருந்தும் என்று இறைவன் கூறுகின்றான்.

இறைவன், உதாரணமாக திருக்குர்ஆனில் மிகவும் சிறப்பான முறையில் இவ்வாறு கூறுகின்றான்: துல்கர்னைன் எந்தவொரு உதவியையும் கேட்கவில்லை. அது இதே சோதனையில் ஆழ்ந்திருந்தது. ஆனால், துல்கர்னைனுக்கு இன்னொரு சமுதாயம் கிடைத்தது. அவர்கள் தமது எதிரிகளிடமிருந்து தப்பிப்பதற்காக துல்கர்னைனிடம் உதவி கேட்டனர். பிறகு ஒரு சுவர் அவர்களுக்காக கட்டப்பட்டது. இதன் காரணமாக அவர்கள் எதிரிகளின் தாக்குதல் –களிலிருந்து தப்பி விட்டனர்.

எனவே, நான் உண்மையாகவே கூறுகின்றான். திருக்குர்ஆன் கூறியுள்ள எதிர்கால முன்னறிவிப்பிற்கு ஏற்ப அந்த துல்கர்னைன் நானே ஆவேன். அந்த துல்கர்னைன் ஒவ்வொரு சமுதாயத்தின் நூற்றாண்டையும் கண்டுள்ளார். முஸ்லிம்களில் என்னை ஏற்றுக் கொள்ளாதவர்கள் வெயிலில் நடக்கின்ற மக்களாக இருக்கின்றனர். சேறுள்ள நீரூற்றுகளிலும் இருள்களிலும் சிக்கிக் கொண்டவர்கள் கிறித்தவர்கள் ஆவர். அவர்கள் சூரியனை ஏறெடுத்துக் கூட பார்க்கவில்லை. எந்த சமுதாயத்திற்காக சுவர் கட்டப்பட்டுள்ளதோ அது எனது ஜமாஅத்தாகும். நான் உண்மையாகவே கூறுகின்றேன். அவர்களது மார்க்கம்தான் எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பித்து விடும். சோம்பேறியாக இருக்கின்ற ஒவ்வோர் அடித்தளத்தையும் இணைவைத்தலும் நாத்திகமும் தின்று விடும். ஆனால், இந்த ஜமாஅத்திற்கு நீண்ட வாழ்நாள் இருக்கும். ஷய்த்தான் அவர்கள் மீது வெற்றி பெற மாட்டான். ஷய்த்தானிய பிரிவும் அவர்கள் மீது வெற்றி பெற முடியாது. அவர்களின் அத்தாட்சி வாளை விட அதிகமாக கூர்மையாகவும் ஈட்டியை விட அதிகமாக உள்ளே நுழையக் கூடியதாகவும் இருக்கும். அவர்கள் மறுமை நாள் வரை ஒவ்வொரு மார்க்கத்தின் மீதும் வெற்றி பெற்றுக் கொண்டே இருப்பார்கள். (ஸமீமா பராஹீனே அஹ்மதிய்யா. ஐந்தாம் பாகம். ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 312)

## இறைவனின் அரசாங்கத்தில் பொய்யைப் புனைந்து கூறுபவர் பழிவாங்கப்பட மாட்டாரா என்ன?

அல்லாஹ் திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி இந்த நபி என் மீது இட்டுக்கட்டி பொய் கூறினால் நாம் அவரை அழித்து விடுவோம் என்று கூறுகின்றான். அதாவது நபித்துவ வாதத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) உயிருடன் இருந்த காலக்கட்டம் அதாவது 23 வருடங்கள் ஒரு நபி உண்மையாளராக இருக்கின்றார் என்பதற்கான அளவுகோலும் ஆதாரமுமாகும். அதாவது, பொய் நபி ஒருபோதும் இந்த காலக்கட்டம் வரை அல்லாஹ்வின் பிடியிலிருந்து தப்பிக்க முடியாது. ஆனால் ஹாஃபிஸ் முஹம்மது யூசுஃப் என்பவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலேயே பல பொய் நபிமார்களும் 23 வருடங்கள் வரை உயிருடன் இருந்தனர். இன்னும் சொல்வதென்றால், 23 வருடங்களை விட அதிகமாக அவர்கள் உயிருடன் இருந்தனர் என்று கூறினார். அதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: இறைவனின் அரசாங்கத்தில் பொய்யைப் புனைந்து கூறுபவர் பழிவாங்கப்பட மாட்டாரா என்ன? அங்கு எல்லா வகையான ஏமாற்று வேலையும் செல்லுபடியாகி விடுமா என்ன? ஒருவர் இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறினாலும் இவ்வுலக வாழ்க்கையில் அவருக்கு எந்தவொரு தண்டனையும் இருக்காது என்பதற்கான சாத்தியக்கூறு எஞ்சி இருப்பதாக இருந்தால் பிறகு ஒரு வகையில் இறைவனின் சட்டத்தை விட மனித அரசாங்கத்தின் சட்டம் மேலானதாக ஆகி விடும். அவர்களில் பொய்யான தஸ்தாவேஜுகளை உருவாக்குபவர்கள் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு அவர்களுக்கு தண்டனை வழங்கப்படுகின்றது.

(துஃபதுன் நத்வா. ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 93)

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபி என்று வாதம் செய்த பிறகு 23 வருட காலக்கட்டம் வரை உயிருடன் இருந்தது ஓர் அற்புதமும் முன்னறிவிப்பும் இல்லையா?

இந்த இடத்தில் இந்த விஷயத்திற்கான தீர்வும் கிடைத்து விட்டது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு திருக்குர்ஆன் முழுமையாக இறங்கும் வரை 23 வருட காலக்கட்டம் உயிருடன் இருப்பதற்கான அவகாசம் கிடைத்திருப்பது, அவர்களை அழிப்பதற்காக செய்யப்பட்ட முயற்சிகளிலிருந்து அவர்கள் பாதுகாப்பாக இருந்தது, தனது வாழ்நாளை நிறைவு செய்து விட்டு இறைவனது கட்டளைக்கு ஏற்ப இந்த உலகை விட்டுச் சென்றது, அவ்வாறே எனக்கும் கூட 80 வருட வாழ்க்கை பற்றிய முன்னறிவிப்பு செய்யப்பட்டிருப்பதும் ஆகிய இவையெல்லாம் நிறைவேறும் வரை இந்த விஷயங்களை ஹாஃபிஸ் சாஹிப் அவர்களின் பார்வையில் அற்புதத்தின் வடிவில் இல்லையா? அத்தகைய முன்னறிவிப்புகள் நிறைவேறும்போது எந்த ஒரு நபரும் உண்மையாளர் என்று கருதப்பட மாட்டாரா?

சுருக்கமாக, நானும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஹாஃபிஸ் சாஹிப் அவர்களின் கொள்கையின் அடிப்படையில் இந்த பாதுகாப்பையும் இறைவன் வழங்கியுள்ள இந்த அகத்தூய்மையையும் எங்களது உண்மைக்கு ஆதாரமாக எடுத்துக் கூற முடியாதா? மாறாக பொய்யர்களும் கூட இதில் பங்கு பெற முடியுமா? அவ்வாறிருந்தால் முழு திருக்குர்ஆனின் கூற்றுக்களும் தவறானதாக ஆகி விடும். ஏனென்றால், திருக்குர்ஆனிலிருந்து இட்டுக்கட்டி பொய் கூறுபவர் பிடிக்கப்படுவார்; இழிவடைவார்; அழிந்து விடுவார் என்றே தெரிய வருகின்றது.

(துஃபதுன் நத்வா. ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 93)

## ஒரு பொய்யருக்கும் உண்மையாளரைப் போன்று உதவி கிடைக்க முடியும் என்றால் பிறகு உண்மையாளர்களுக்கும் பொய்யர்களுக்குமிடையில் என்ன வித்தியாசம் இருக்கின்றது?

உண்மையாளர்களுக்கும் பொய்யர்களுக்குமிடையில் இறைவனின் பார்வையில் எந்த வித்தியாசமும் இல்லையா என்ன? கண்டிப்பாக இருக்கின்றது. அல்லாஹ் தன்னால் நியமிக்கப் –பட்டவர்கள் மற்றும் தூதர்கள் ஆகியோருக்கு எல்லா களத்திலும் தனது உதவியையும் ஆதரவையும் வழங்குகின்றான். ஆனால், பொய்யர்களை தனது வாக்குறுதிக்கு ஏற்ப அவன் அழித்து விடுகின்றான். எனவே, ஒவ்வொரு களத்திலும் அல்லாஹ்வின் ஆதரவும் உதவியும் ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு கிடைத்து வருவது அவர்கள் உண்மையாளராக இருக்கின்றார்கள் என்பதற்கான ஆதாரமாக இருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹாஃபிஸ் சாஹிப் அவர்களின் பார்வையில் பொய் நபிமார்களுக்கும் கூட இந்த அளவு உதவி கிடைக்க முடியும் என்றால் அதாவது எதிரிகள் உயிரை மாய்த்துக் கொள்ளும் அளவில் முயற்சி செய்த பிறகும் கூட தமது மார்க்கம் பூமியில் உறுதியாக நிலைநிற்கும் வரை அவர்கள் உயிருடன் இருக்க முடியுமென்றால் இந்த கொள்கையினால் எல்லா உண்மையான நபிமார்களும் மண்ணோடு கலந்து விட்டனர். உண்மைக்கும் பொய்க்கும் இடையில் எவ்வித வித்தியாசமுமின்றி சீர்குலைவு ஏற்பட்டு விட்டது. ஆயிரக்கணக்கான எதிரிகளின் நூற்றுக்கணக்கான தீய எண்ணங்கள், ஏமாற்று வேலைகள் முயற்சிகள் ஆகியவற்றிக்கு எதிராக இறைவனால் நியமிக்கப்பட்ட ஒருவரை உயிருடன் வைத்திருப்பதும் அவரது மார்க்கத்தை பூமியில் உறுதியுடன் நிலைத்திருக்கும் படி செய்வதும் இறைவனின் மிகப்பெரும் அற்புதமாகும். அது உண்மையான முழுமையான நபிமார்களுக்கே வழங்கப்படுகின்றது. இந்த அற்புதத்தில் பொய்யான நபிமார்களும் பங்கு பெற்றிருந்தால் அந்நிலையில் இந்த அற்புதமும் கூட நம்புவதற்கு தகுதியுள்ளதாக இருக்காது. மேலும், உண்மையான நபியின் உண்மைக்கு எந்த ஒரு மறுக்க முடியாத ஆதாரமும் எஞ்சியிருக்காது. அந்தோ! ஹாஃபிஸ் சாஹிப் அவர்களே! நீங்கள் இஸ்லாத்தையே அழித்து விட்டீர்கள்! ஹாஃபிஸ் என்றால் இப்படிப்பட்டவராகத்தான் இருக்க வேண்டும்.

(துஃபதுன் நத்வா. ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 93)

## வாக்களிக்கப்பட்ட மஸீஹை அழிப்பதற்காக எந்தவொரு முயற்சியும் விட்டு வைக்கப்படவில்லை. ஆனால், அல்லாஹ் அவர்களைப் பாதுகாத்தான். அவர்களது இயக்கம் முன்னேறிக் கொண்டே செல்கின்றது

முற்றிலும் தெளிவான நேர்மையான விஷயமாக இது இருக்கின்றது. அதாவது எவர் அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப் படுகின்றாரோ அவருக்கு எதிராக எதிரிகளின் எந்தவொரு திட்டமும் வெற்றி பெறுவதில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

“பிறகு இன்னோர் அடையாளமும் அவர்களுக்கென்று இருந்தது. அதாவது அவர்கள் என்னை அழிப்பதற்காக உயிரை மாய்ததுக் கொண்டு முயற்சிகளைச் செய்தனர். அவர்கள் பயன்படுத்தாத எந்தவொரு சூழ்ச்சியும் ஏமாற்று வேலையும் இருக்கவில்லை. எதிர்ப்பை வெளிப்படுத்துவதில் தங்களது முழு வேகத்தையும் பயன்படுத்தியவாறு தங்களது பல்வேறு வகையிலான வசதிகளைச் செலவு செய்தனர். எதிர்ப்பதில் தங்கள் விரல் நுனிகள்

வரை அழுத்தம் கொடுத்தனர். ஆகுமான மற்றும் தகாத எல்லா வழிமுறைகளையும் கடைபிடித்தனர். ஏசிப் பேசுவது, ஏளனம் செய்வது, இழிவுபடுத்துவது ஆகியவற்றை முழுமையாக செய்தனர். ஆட்சியாளர்கள் வரை வழக்குகளைக் கொண்டு சென்றனர். கொலைக் குற்றம் சாட்டினர். ஆனால் இறுதியில் என்ன விளைவு ஏற்பட்டது என்றால் எந்த ஜமாஅத் அதன் ஆரம்ப நாட்களில் நாற்பதை விட குறைவான நபர்களைக் கொண்டதாக இருந்ததோ அது இன்று ஏறக்குறைய எழுபதாயிரம் பேர்களைக் கொண்டதாக ஆகி விட்டது.''

(நுஸுலுல் மஸீஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 408)

## முஸைலமா ஒரே போரில் அழிக்கப்பட்டான். ஆனால், நீங்கள் இருபது வருடங்களாக என்னுடன் போர் புரிந்து தோல்வியையே தழுவியுள்ளீர்கள்

நீங்கள் எனக்கு முஸைலமா கஸ்ஸாப் என்று பெயர் சூட்டினார்கள். ஆனால், முஸைலமா யாரென்றால் ஒரே போரில் அவன் அழிக்கப்பட்டான். ஆனால், நீங்களோ இருபது வருடங்களாக என்னுடன் போர் புரிந்துள்ளீர்கள். ஒவ்வொரு போரிலும் நீங்கள் தோல்வியடைந்துள்ளீர்கள். உண்மையாளர்கள் மற்றும் நம்பிக்கை கொண்டவர்களின் அடையாளம் இவ்வாறுதான் இருக்குமா என்ன? நீங்கள் குறைந்து கொண்டே செல்வதையும் நாங்கள் வளர்ந்து கொண்டே செல்வதையும் நீங்கள் பார்ப்பதில்லையா? உங்களது பாதம் ஏதாவது ஓர் உண்மையில் நிலைத்திருந்தால், பிறகு இந்த போட்டியில் உங்களது முடிவும் அதற்கு ஏற்பவே இருந்திருக்க வேண்டும்.

(நுஸுலுல் மஸீஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 407)

## எதிரிகளின் அழிவு வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு எதிரில் அவர்களது எதிரிகள் அடுத்தடுத்து அழிந்து போனதும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் கண்ணியத்துடன் புகழ்பெற்று விளங்குவதும் அவர்கள் உண்மையாளர் என்பதற்கான அடையாளமாக இல்லையா?

தன்னால் நியமிக்கப்பட்டவர்கள் மற்றும் தனது தூதர்களுக்காக அவர்களது எதிரிகளை அழிக்க வேண்டியது வந்தாலும் அல்லாஹ் அதில் தயக்கம் காட்டுவதில்லை. எதிரிகளின் அழிவு இறைவனால் நியமிக்கப்பட்டவர்கள் மற்றும் அவனது தூதர்களின் உண்மைக்கு மிகப்பெரும் ஆதாரமாக இருக்கின்றது. தமது எதிரிகள் சிலரின் அழிவைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

முதலில் உங்களிலிருந்து அலிகட்டைச் சார்ந்த மவ்லவி இஸ்மாயீல் அவர்கள் எனக்கு எதிராக நம்மில் எவர் பொய்யராக இருக்கின்றாரோ அவர் முதலில் மரணமடைவார் என்று கூறினார். நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். அவர் மரணமடைந்து ஏறக்குறைய பத்து வருடங்கள் ஆகி விட்டன. இப்போது மண்ணிலுள்ள அவரது எலும்புகள் கூட கிடைக்காது. பிறகு பஞ்சாபில் குஸீரைச் சார்ந்த மவ்லவி குலாம் தஸ்தகீர் அவர்கள் எழுந்தார். அவர் தன்னை ஒரு பொருட்டாகக் கருதினார். அவர் தனது ஒரு நூலில் எனக்கு எதிராக இருவரில் எவர் பொய்யராக இருக்கின்றாரோ அவர் முதலில் மரணித்து விடுவார் என்று எழுதினார். குலாம் தஸ்தகீரும் மரணித்து பல வருடங்கள் ஆகி விட்டன. அச்சிடப்பட்டுள்ள அவரது அந்த நூலும் இருக்கின்றது. இவ்வாறே மவ்லவி ரஷீது அஹ்மது கங்கோயி எழுந்தார். அவர் எனக்கு எதிராக ஒரு பிரசுரத்தை வெளியிட்டார். பொய்யர்கள் மீது சாபமிட்டார். சில நாட்கள் கழிந்த பிறகு அவர் குருடராகி விட்டார். பாருங்கள். மேலும், படிப்பினை பெறுங்கள். இதற்கு பிறகு லகூக்கேவைச் சார்ந்த மவ்லவி குலாம் முஹிய்யுத்தீன் எழுந்தார். அவரும் கூட அவ்வாறே தனது இல்ஹாமை வெளியிட்டார். இறுதியில் அவரும் கூட விரைவாக உலகிலிருந்து பிரிந்து சென்று விட்டார். பிறகு அப்துல் ஹக் கஸ்னவி எழுந்தார். அவர் எனக்கு எதிராக முபாஹலா செய்து, எவர் பொய்யராக இருக்கின்றாரோ அவர் மீது இறைவனின் சாபம் உண்டாகட்டும். அருள்களிலிருந்து அவர் விலக்கி வைக்கப்படுபவராக ஆகட்டும். உலகில் அவர் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான பெயரும் அடையாளமும் கூட இல்லாமல் ஆகட்டும் என்று துஆ செய்தார். இந்த துஆக்களின் முடிவு எப்படி இருந்தது என்பதையும் இப்போது அவர் எந்த நிலைமையில் இருக்கின்றார். மேலும், நாம் எந்த நிலைமையில் இருக்கின்றோம் என்பதையும் சுயமே நீங்களே கண்டு கொள்ளுங்கள். பாருங்கள்! இந்த முபாஹலாவிற்குப் பிறகு ஒவ்வொரு விஷயத்திலும் இறைவன் நம்மை முன்னேற வைத்துள்ளான். வானத்திலும் பூமியிலும் பெரும் பெரும் அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளான். முபாஹலா நடந்தபோது ஒருவேளை நாற்பது பேர்கள்தான் எனது நண்பர்களாக இந்திருப்பார். இன்று அவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய எழுபதாயிரம் ஆகும். பொருளாதார வெற்றிகள் இப்போது வரை இரண்டு இலட்சம் ரூபாய்களை விட அதிகமாக இருக்கின்றது. மேலும் ஓர் உலகை அவன் அடிமை போன்று என்னுடன் பற்றுறுதி கொண்டதாக ஆக்கி விட்டான். பூமியின் எல்லைகள் வரை கொண்டதாக ஆக்கி விட்டான். பூமியின் எல்லைகள் வரை என்னை புகழ் பெறச் செய்து விட்டான். முதலில் காதியானுக்கு வருங்கள். பற்றுறுதி கொண்டவர்களின் படை எந்த அளவு இங்கு கூடாரமிட்டு அமர்ந்திருக்கின்றது என்பதைப் பாருங்கள். பிறகு அமிர்தசரஸில் அப்துல் ஹக் கஸ்னவி ஏதாவதொரு கடையில் இருப்பதையோ அல்லது கடை வீதியில் நடந்து செல்வதையோ பாருங்கள். அவர் எந்த நிலைமையில் நடந்து செல்வதையோ பாருங்கள். அவர் எந்த நிலைமையில் நடந்து சென்று கொண்டிருக்கின்றார் என்பதைப் பாருங்கள். இறைவனின் உதவி பகிரங்கமாக எனக்கு உதவி செய்வதற்காக வானத்திலிருந்து இறங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால், இந்த மக்கள் அடையாளங்கண்டு கொள்வதில்லை.

(நுஸுலுல் மஸீஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 409)

அதாவது, லக்கூகேவைச் சார்ந்த முஹியுத்தீன் எனது மரணத்தைப் பற்றி தனக்கு வந்த இல்ஹாமை வெளியிட்டார். சுயமே அவரே மரணித்து விட்டார். மவ்லவி இஸ்மாயீல் அவ்வாறே வெளியிட்டார். அவர் மரணித்துவிட்டார். மவ்லவி குலாம் தஸ்தகீர் ஒரு நூலை எழுதி, தான் மரணிப்பதற்கு முன்னதாக நான் மரணித்து விடுவேன் என்று அதில் குறிப்பிட்டவாறு மிகவும் பரப்பரப்புடனும் கூச்சலிட்டவாறும் அதை வெளியிட்டார். சுயமே அவரே மரணமடைந்து விட்டார். பெஷாவரைச் சார்ந்த பாதிரி ஹமீதுல்லாஹ் எனது மரணம் 10 மாதங்களுக்குள் நிகழும் என கால அளவை நிர்ணயித்து தனது முன்னறிவிப்பை வெளியிட்டார். சுயமே அவரே மரணித்து விட்டார். லேக்ராம் எனது மரணம் மூன்று வருடங்களுக்குள் நிகழும் என்று முன்னறிவிப்பு செய்திருந்தார். சுயமே அவரே மரணமடைந்து விட்டார்.

(ஸமீமா துஹ்ஃபா கோல்டுவிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 45)

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் [ஸல்] அவர்களின் காலத்திற்குப் பிறகு இத்தகைய பகிரங்கமான தெளிவான தோல்வியும் இழிவும் எந்தவோர் எதிரிக்கும் ஏற்பட்டதில்லை

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திற்குப் பிறகு அல்லாஹ்வைச் சார்ந்து நிற்கின்ற, உண்மையைச் சார்ந்து நிற்கின்ற, ஒருவருக்கு எதிராக நிற்கின்ற எந்தவோர் எதிரிக்கும் எனக்கு எதிராக நின்ற எனது எதிரிகளுக்கு ஏற்பட்டது போன்ற அத்தகைய தெளிவான பகிரங்கமான தோல்வியும் இழிவும் ஏற்பட்டிருக்கின்றது என்பதை ஒருபோதும் என்னால் உறுதியாக நம்ப முடியாது. அந்த எதிரிகள் எனது கண்ணியத்தின் மீது தாக்குதல் நடத்தினால்

இறுதியில் அவர்களே அவமானத்திற்கு ஆளாகி இருக்கின்றனர். எனது உயிரின் மீது தாக்குதல் நடத்தியவாறு இவர் எங்களுக்கு முன்னதாக மரணமடைவதுதான் இந்த நபரது உண்மை மற்றும் பொய்யிற்கான அளவுகோலாக இருக்கும் என்று கூறியவர்கள் சுயமே அவர்களே மரணமடைந்து விட்டனர். மவ்லவி குலாம் தஷ்தகீர் அவர்களின் நூல் அச்சிட்டு வெளியிடப்பட்டு வெகு காலம் ஆகி விட்டது. பாருங்கள்! அதில் எவ்வளவு தைரியத்துடன் அவர் நம் இருவரில் எவர் பொய்யராக இருக்கின்றாரோ அவர் முதலில் மரணிப்பார் என்று எழுதியுள்ளார். பிறகு சுயமே அவரே மரணமடைந்து விட்டார். இதிலிருந்து மக்கள் எனது மரணத்தை மிகவும் ஆவலுடன் எதிர்பார்திருந்தனர் என்பது தெரிய வருகின்றது. எங்கள் இருவரில் யார் பொய்யராக இருக்கின்றாரோ அவர் முதலில் மரணிக்க வேண்டும் என்று அவர்கள் இறைவனிடம் துஆக்கள் செய்தனர். இறுதியில் அவர்களே மரணித்து விட்டனர். ஒருவரல்ல; இருவரல்ல. மாறாக, ஐந்து பேர் அவ்வாறே செய்தனர். பிறகு இந்த உலகை விட்டு விட்டுச் சென்று விட்டனர்.

(ஸமீமா துஃபா கோல்டுவிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 46)

## முப்பது தஜ்ஜால் வருவார்கள் என்பதற்கான பதில் முப்பது தஜ்ஜால்கள் வருவார்கள். ஆனால், நபி அல்லது முஜத்திது [சீர்த்திருத்தவாதி] ஒருவர் கூட வரமாட்டார் என்பது எவ்வளவு சிறந்த கொள்கையாக இருக்கின்றது

முஸ்லிம் ஆலிம்கள் ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை மிகவும் மோசமாக எதிர்த்தனர். ஹஸ்ரத் நபகிள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எந்த ஒரு நபியும் இந்த அளவு எதிர்ப்பிற்கு ஆளானதற்கான உதாரணம் கிடைக்காது. அளவில்லாமல் ஏச்சுப் பேச்சுக்களுக்கு அவர்கள் ஆளானார்கள். தஜ்ஜால் என்று அழைக்கப்பட்டார்கள்.

தஜ்ஜால் என்று கூறப்பட்டதற்கு பதில் கூறியவாறு அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: உம்மத்தை முற்றிலுமாக அழித்து விடுவதற்காக இந்த உம்மத்தில் முப்பது பொய்யர்கள் வருவார்கள் என்று ஹதீஸ்களில் இருக்கின்றது என்று அவர்கள் கூறுகின்றனர். இது எவ்வளவு சிறந்த கொள்கையாக இருக்கின்றது. அறிவற்றவர்களே! இந்த உம்மத்திற்குக் கிடைக்கின்ற துர்பாக்கியமாக அவர்களது பங்கில் முப்பது தஜ்ஜால்கள் வரலாம். ஆனால், சிலுவைக் கொள்கையின் புயலைத் தடுத்து நிறுத்துவதற்காக ஒரு முஜத்திது (சீர்திருத்தவாதி) கூட வர முடியவில்லை. இதுதான் அவர்களது பங்கில் உள்ள நற்பாக்கியமா? இறைவன் முன்னுள்ள சமுதாயங்களில் அடுத்தடுத்து நபியையும் தூதரையும் அனுப்பியுள்ளான். இந்த உம்மத்திற்கான முறை வந்த சமயத்தில் அவர்களிடம் முப்பது தஜ்ஜால்கள் வருவார்கள் என்ற நற்செய்தி கூறப்பட்டிருக்கின்றது. இறுதியில் இந்த உம்மத்தின் ஆலிம்கள் கூட யூதர்களாக ஆகி விடுவர் என்பது கூட நிரூபிக்கப்பட்ட முன்னறிவிப்பாக இருக்கின்றது. இதுவரை இலட்சக்கணக்கான நபர்கள் முர்தத் ஆகி விட்டனர் என்பதும் வெளிப்படையாகத் தெரிய வந்திருக்கின்றது. அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைக் கை விட்டு விட்டனர். இந்த அளவு வழிகேடு இருந்தும் கூட இறைவன் மகிழ்ச்சி அடையாமல் இருக்கின்றானா? நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்த உம்மத்திலிருந்து சுயமே அவனே ஒரு தஜ்ஜாலை அனுப்பாத வரை அவனுக்கு மன நிறைவு ஏற்படவில்லையா? கருணை காட்டப்பட வேண்டிய இந்த உம்மத்திற்குச் சாதகமாக இந்த அளவு அருள்கள் வழங்கப்பட்டிருப்பது எவ்வளவு சிறப்பிற்குரிய விஷயமாக இருக்கின்றது. பிறகு இந்த தஜ்ஜாலை கொல்வதற்காக ஸஜ்தாக்களில் நம்பிக்கை கொண்டவர் –களின் மூக்குகள் தேய்ந்து போயின. அந்த தஜ்ஜாலின் அழிவிற்காக இலட்சக்கணக்கான துஆக்கள் செய்யப்பட்டன. திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனால் இறைவன் அவற்றை கேட்காமல் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டான். ஆனால் அதற்கு நேர் மாற்றமாக இந்த தஜ்ஜால் தொடர்ந்து முப்பது வருடங்களாக முன்னேறிக் கொண்டேயிருக்கின்றார். உலகில் வானத்தின் ஒளியைப் போன்று பரவிக் கொண்டே செல்கின்றார். இதிலிருந்து இந்த உம்மத் மிகவும் துர்பாக்கியமுள்ள ஓர் உம்மத்தாகும் என்பது நிரூபணமாகி இருக்கின்றது. மேலும் இதை அழித்து விட வேண்டும் என்பதே இறைவனின் உறுதியான எண்ணமாக இருப்பது தெரிய வருகின்றது. இந்த உம்மத் எந்த அளவு இறைவனின் கோபத்திற்கு ஆளாகி இருக்கின்றது என்றால், ஒருபுறம் அது தஜ்ஜாலின் பிடியின் கீழ் வந்து விட்டது. மேலும் இதுவரை உண்மையான மஸீஹ் மற்றும் மஹ்தி விண்ணில் இருப்பதாகவும் தெரியவில்லை. பூமியில் ஆயிரம் முறை கதறினாலும் கூட தொலைந்து போன அந்த இருவரும் அவர்கள் உயிருடன் இருக்கின்றனரா? அல்லது மரணித்து விட்டனரா? எங்கு இருக்கின்றார்? என்ற கேள்விக்கு பதில் கூட கூறுவதில்லை. நபிமார்கள் நிர்ணயித்திருந்த காலமும் கூட கடந்து சென்று விட்டது. உம்மத்தை கிறித்தவ மதம் தின்று விட்டது. ஆனால், இறைவனுக்கும் கருணை வரவில்லை. அவ்வாறே மஹ்தி மற்றும் மஸீஹ் ஆகிய இருவரது உள்ளங்களும் மென்மையாக இருக்கவில்லை.

(நுஸூலுல் மஸீஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 413)

## கொள்கை பழக்கமாக மாறி விட்டால் அதை விட்டு விடுவது கடினமானதாகும்

ஒவ்வொரு கொள்கையும் பழக்கத்தில் நுழைந்து விட்டால் அதை விட்டு விடுவது கடினமானதாகும். இந்த காரணத்தினால்தான் வெகு நாட்களுக்கு முன்னரே மரணித்து விட்ட ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உங்களது எண்ணத்தில் இப்போது வரை இந்த பூத உடலுடன் வானத்தில் அமர்ந்திருக்கின்றார். ஆனால் உண்மை என்னவென்றால், அவர் வானத்தில் அல்ல. மாறாக, உங்களது உள்ளத்தில் அமர்ந்திருக்கின்றார். பழைய கொள்கைகளின் காரணமாக எல்லா நொடியும் அவர்கள் உங்களது நாவில் இறங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

(நுஸூலுல் மஸீஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 413)

## போட்டிக்கான அழைப்பு மற்றும் இயக்கத்தின் முன்னேற்றம் தொடர்பான மகத்தான முன்னறிவிப்பு வருங்காலத்தில் இஸ்லாம் என்பதன் கருத்து இந்த இயக்கமாகத்தான் இருக்கும். அதாவது, அஹ்மதிய்யா ஜமாஅத்தாக இருக்கும்

ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது உண்மையை நிரூபிப்பதற்கான எல்லா வழிமுறைகளையும் மேற்கொண்டார்கள். எல்லா வகையிலும் போட்டிக்கான அழைப்பை விடுத்தார்கள். அவர்கள் எதிரிகளை போட்டிக்காக அழைத்தது தமது அறிவை பெரிதுபடுத்திக் காட்ட வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக, இந்த வழிமுறையின் மூலமாக மக்கள் உண்மையைப் பெற்று விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டுமே அன்னார் அவ்வாறு செய்தார்கள். அவர்கள் திருக்குர்ஆனுக்கு விளக்கம் எழுதுவதில் தன்னுடன் போட்டி போடுமாறு அழைப்பு விடுத்தார்கள். துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில் தன்னுடன் போட்டி போடுமாறு அழைப்பு விடுத்தார்கள். அடையாளங்களைக் காட்டுவதில் போட்டி போடுமாறு அழைப்பு விடுத்தார்கள். ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய அன்னாரது ஒரு மேற்கோள் கீழே தரப்படுகின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: “என்னை பொய்ப்படுத்துவதற்காக இந்த அளவு ஏன் துன்பங்களைச் சகிக்க வேண்டும்? வானத்திற்கு கீழே என்னைப் போன்று இறையுதவி பெற்ற

இன்னொருவரும் இருக்கின்றார் என்றால், மேலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகத்தான் இருக்கின்றேன் என்ற எனது வாதத்தை பொய்ப்படுத்துபவராக அவர் இருந்தால் பிறகு ஏன் என்னை எதிர்த்து அவர் களத்தில் வருவதில்லை? பெண்களைப் போன்று விஷயங்களை உருவாக்குகின்ற இந்த வழிமுறை யாருக்குத்தான் வராது, எப்போதும் வெட்கமற்ற மறுப்பவர்கள் அவ்வாறே செய்து வந்துள்ளனர். ஆனால் நான் களத்தில் நிற்கும் நிலையில் மேலும் ஏறக்குறைய முப்பதாயிரம் அறிஞர்கள், ஆலிம்கள், ஃபக்கீர்மார்கள், புரியும் திறன் கொண்ட மனிதர்கள் ஆகியோரின் ஜமாஅத் என்னுடன் இருக்கும்போது மேலும் மழையைப் போன்று வானத்து அடையாளங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும்போது வாயால் ஊதுவதால் மட்டும் இந்த இறை இயக்கம் அழிந்து விட முடியுமா? ஒருபோதும் அழியாது. இறைவனின் ஏற்பாட்டை அழிக்க விரும்புபவர்கள்தான் அழிந்து போவார்கள்.

(1) இறைவன் எனக்கு திருக்குர்ஆனின் ஞானத்தை வழங்கியுள்ளான். (2) இறைவன் எனக்கு திருக்குர்ஆனின் மொழியின் அற்புதத்தை வழங்கியுள்ளான். (3) இறைவன் எனது துஆக்களில் எல்லாரையும் விட அதிகமாக ஏற்புடைமையை வைத்துள்ளான். (4) இறைவன் எனக்கு வானத்திலிருந்து அடையாளத்தை வழங்கியுள்ளான். (5) இறைவன் எனக்கு பூமியிலிருந்து அடையாளத்தை வழங்கியுள்ளான். (6) இறைவன் உம்முடன் போட்டி போடுகின்ற ஒவ்வொருவரும் தோல்வி அடைவார் என்று எனக்கு வாக்குறுதி வழங்கியுள்ளான். (7) உம்மைப் பின்பற்றுபவர்கள் எப்போதும் தமது உண்மையான ஆதாரங்களின் அடிப்படையில் வெற்றி பெறுவார்கள். உலகில் பெரும்பாலும் அவர்களும் அவர்களது சந்ததிகளும் பெரும் பெரும் கண்ணியத்தைப் பெறுவார்கள். அதன் மூலம் எவர் இறைவன் புறமிருந்து வருகின்றாரோ அவருக்கு எந்த இழப்பும் ஏற்படுவதில்லை என்பது அவர்கள் மீது நிரூபிக்கப்படும் என்று இறைவன் எனக்கு நற்செய்தி வழங்கியுள்ளான். (8) மறுமை நாள் வரையிலும், உலகின் தொடர் துண்டிக்கப்படும் வரையிலும் நான் உமது அருள்களை வெளிப்படுத்திக் கொண்டேயிருப்பேன். எதுவரையென்றால், அரசர்கள் உமது ஆடையிலிருந்து அருள்களைத் தேடுவர் என்று இறைவன் எனக்கு வாக்குறுதி வழங்கியுள்ளான். (9) இறைவன் இன்றிலிருந்து இருபது வருடங்களுக்கு முன்னர் நீ மறுக்கப்படுவாய். மக்கள் உம்மை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் நான் உம்மை ஏற்றுக் கொள்வேன். மிகவும் வலுவான தாக்குதல்கள் மூலமாக உமது உண்மையை வெளிப்படுத்துவேன் என்று எனக்கு நற்செய்தி வழங்கியுள்ளான். (10) உமது அருள்களின் ஒளியை மீண்டும் வெளிப்படுத்திக் காட்டுவதற்காக உம்மிலிருந்து உமது சந்ததியில் இருந்து ஒரு நபர் நிறுத்தப்படுவார். அவர் மீது நான் பரிசுத்த ஆவியின் அருள்களை ஊதுவேன். அவர் தூய அகத்தை உடையவராகவும் இறைவனிடத்தில் மிகவும் தூய தொடர்பை உடையவராகவும் இருப்பார். அவர் உண்மையையும் உயர்வையும் வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார். வானத்திலிருந்து இறைவனே இறங்கி வந்தது போன்று இருக்கும் என்று இறைவன் எனக்கு வாக்குறுதி வழங்கியுள்ளன். தில்க அஷரதுன் காமிலா – இதுவே முழுமை பெற்ற பத்து அடையாளங்களாகும்.

பாருங்கள்! அந்த காலம் வந்து கொண்டிருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால், அருகில் இருக்கின்றது. இறைவன் இந்த இயக்கம் உலகில் பெருமளவு ஏற்றுக் கொள்ளப்படுவதை பரப்பி விடுவான். மேலும், இந்த இயக்கம் கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் பரவி விடும். உலகில் இஸ்லாம் என்பதன் கருத்து இந்த இயக்கமாகவே இருக்கும். இவ்விஷயங்கள் மனிதன் கூறியுள்ள விஷயங்கள் அல்ல. எந்த இறைவனின் முன்னிலையில் சாத்தியமற்றதாக எந்தவொரு விஷயமும் இல்லையோ இவை அத்தகைய இறைவனின் கூற்றுக்களாகும்.''

(துஃபா கோல்டுவிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 181)

## உண்மையாளர் மற்றும் பொய்யருக்குமிடையில் தீர்ப்பு தொடர்பான இன்னொரு வழிமுறை எனக்கு எதிராக தீய துஆக்களைச் செய்யுங்கள். மேலும் அழுதழுது எனது வீழ்ச்சிக்காக வேண்டுங்கள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் பல இடங்களில் இதனை குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள். எவரெல்லாம் மரணத்தின் மூலமாக அவர்கள் பொய்யரா? அல்லது உண்மையாளரா? என்பதற்கான தீர்ப்பை விரும்பினாரோ அப்படிப் பட்டவரது உயிரை தயக்கமின்றி இறைவன் எடுத்து விட்டான். இறைவன் உண்மையாளருக்கு எதிரில் ஆயிரக்கணக்கானோரின் உயிர்களைக் கூட சிறிதும் பொருட்படுத்தமாட்டான். நூற்றுக்கணக்கான எதிரிகள் அவர்களை எதிர்த்து நின்று, அவர்களுடன் முபாஹலா செய்து, அவர்களுக்கு எதிராக தீய துஆ செய்து, அல்லது இறைவனிடம் அவர்களது மரணத்தை வேண்டி இறுதியில் அழிந்து போய் விட்டனர். எவராவது தீய துஆவின் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்தை அல்லது பொய்மையைப் பிரித்தறிய விரும்பினால் இப்போதும் கூட அதற்கான வாசல் திறந்திருக்கின்றது. ஈமானுக்கு வலுவூட்டக் கூடிய அவர்களின் இந்த எழுத்துக்களைப் படித்துப் பாருங்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''நீங்கள் என்னை பொய்யர் என்று கருதினால் உங்களுக்கு இந்த உரிமையும் இருக்கின்றது. அதாவது, பள்ளிவாயில்களில் ஒன்று சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ எனக்கு எதிராக தீய துஆக்கள் செய்யுங்கள். மேலும் அழுதழுது எனது வீழ்ச்சிக்காக வேண்டுங்கள். பிறகு நான் பொய்யனாக இருந்தால் பிறகு கண்டிப்பாக அந்த துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும். மேலும் நீங்கள் எப்போதும் துஆக்கள் செய்து கொண்டும் இருக்கின்றீர்கள். ஆனால், நினைவில் கொள்ளுங்கள். நாவுகளின் காபம் ஏற்படுகின்ற அளவுக்கு நீங்கள் துஆ செய்தாலும், மூக்குகள் தேய்ந்துபோகும் அளவுக்கு அழுதழுது ஸஜ்தாக்களில் வீழ்ந்தாலும், கண்ணீரினால் கண்ணின் கருவிழிகள் மாய்ந்துபோய் புருவங்கள் உதிர்ந்து போனாலும், அதிகமாக அழுததன் காரணமாக பார்வை குறைந்து போனாலும், இறுதியில் புத்தி தடுமாறி காக்கா வலிப்பு வந்தாலும் அல்லது பைத்தியம் பிடித்து விட்டாலும் கூட அந்த துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஏனென்றால், நான் இறைவனிடமிருந்து வந்துள்ளேன். எந்த நபர் எனக்கு எதிராக தீய துஆ செய்வாரோ அந்த தீய துஆ அவர் மீதே விழும். எந்த நபர் என் தொடர்பாக அவர் மீது சாபம் உண்டாகட்டும் என்று கூறுகின்றாரோ அந்த சாபம் அவரது உள்ளத்தில் படிந்து விடுகின்றது. ஆனால், அது அவருக்கு நல்லது அல்ல. எந்த நபர் என்னுடன் குத்துச் சண்டையிட்டவாறு நம்மில் எவர் பொய்யராக இருக்கின்றாரோ அவர் முதலில் மரணிக்க வேண்டும் என்று துஆக்கள் செய்கின்றாரோ அதன் விளைவானது குஸூரைச் சார்ந்த மவ்லவி குலாம் தஷ்தகீர் பார்த்த அதே விளைவாகத்தான் இருக்கும்.''

(அர்பயீன். ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 471)

## வாக்களிக்கப்பட்ட மஸீஹை எதிர்ப்பது இறைவனை எதிர்ப்பதாகும். இறைவனோடு சண்டையிடாதீர்கள். என்னை அழிப்பது உங்கள் வேலையல்ல

நான் எந்த அளவுக்குப் பின்னால் விலகிச் செல்வதற்கு விரும்புகின்றேனோ அந்த அளவுக்கு இறைவன் என்னை இழுத்து

முன்னே கொண்டு வருகின்றான். நான் உம்முடன் இருக்கின்றேன். வானத்தின் படைகள் உம்முடன் இருக்கின்றன என்று எனக்கு ஆறுதல் வழங்கப்படாத அத்தகைய இரவுகள் என் மீது மிகக் குறைவாகவே கழிந்திருக்கும். எந்த மக்கள் தூய்மையான உள்ளத்தை உடையவர்களாக இருக்கின்றார்களோ அத்தகையவர்கள் மரணத்திற்குப் பிறகு இறைவனை பார்ப்பவர்கள் என்றாலும் நான் அதே இறைவனின் முகத்தின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். நான் இப்போதும் கூட அவனை பார்த்துக் கொண்டு இருக்கின்றேன். உலகம் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ஆனால் என்னை அனுப்பியவன் என்னை நன்கறிவான். எனது அழிவை நாடுவது இந்த மக்களின் தவறாகும். முற்றிலும் துர்பாக்கியமாகும். நான் உண்மையான அரசனின் கையால் நடப்பட்ட மரமாவேன். எவர் என்னை வெட்ட விரும்புகின்றாரோ அதன் விளைவானது அவர் காரூன், யூதாஸ் மற்றும் அபூஜஹில் ஆகியோரின் பங்கிலிருந்து சிலவற்றைப் பெற விரும்புகின்றார் என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை. எவராவது களத்தில் வரட்டும். மேலும் நபித்துவ வழிமுறைக்கு ஏற்ப என் மூலமாக தீர்ப்பு கூறப்படுவதை விரும்பட்டும் என்பதற்காக ஒவ்வொரு நாளும் கண்ணீர் நிறைந்த கண்களுடன் நான் இருக்கின்றேன். ஆனால், களத்தில் வருவது ஒரு திருநங்கையின் பணியல்ல. எனினும், நமது நாட்டில் பஞ்சாபில் குலாம் தஷ்தகீர் என்பவர் மறுப்பின் படையின் ஒரு சிப்பாயாக இருந்தார். அவர் பயன் தரக்கூடியவராக இருந்தார். இப்போது இந்த மக்களில் அவரைப் போன்ற ஒருவர் வருவது என்பது நடைபெறாத சாத்தியமற்ற ஒரு விஷயமாகும். மக்களே! என்னுடன் கடைசி வரை விசுவாசத்துடன் இருக்கக் கூடிய கை உள்ளது என்பதை உறுதியாக தெரிந்து கொள்ளுங்கள். உங்களில் ஆண்கள், பெண்கள், வாலிபர்கள், வயோதிகர்கள், பெரியவர்கள், சிறியவர்கள் ஆகிய அனைவரும் ஒன்றாக எனது அழிவிற்காக ஸஜ்தா செய்து செய்து, மூக்கு தேய்ந்து, கை ஏந்தி ஏந்தி செயலிழந்து போகும் அளவுக்கு துஆ செய்தாலும் அவன் உங்களது துஆக்களை ஒருபோதும் கேட்க மாட்டான். மேலும் தன் வேலையை முடிக்காமல் நிற்க மாட்டான். மனிதர்களில் ஒருவர் கூட எனக்கு ஒத்துழைப்பு தராவிட்டாலும் இறைவனின் மலக்குகள் எனக்கு ஒத்துழைப்பு தருவார்கள். நீங்கள் சாட்சிகளை மறைத்தால் மிக விரைவில் கல் கூட எனக்காக சாட்சி கூறும். எனவே உங்கள் ஆன்மா மீது அநீதியிழைக்காதீர்கள். பொய்யர்களின் முகம் வேறாகவும் உண்மையாளர்களின் முகம் வேறாகவும் இருக்கின்றது. இறைவன் எந்த விஷயத்தையும் தீர்ப்பளிக்காமல் விட்டு விட மாட்டான். பொய் மற்றும் இட்டுக்கட்டையும் கொண்ட வாழ்க்கையின் மீதும் பிறருக்காக அஞ்சி இறை கட்டளையை ஏற்க மறுக்கும் நிலையின் மீதும் நான் சாபமிடுகின்றேன். எந்த சேவையை குறித்த நேரத்தில் ஆற்றல் மிக்க இறைவன் என்னிடம் ஒப்படைத்து அதற்காகவே என்னைப் படைத்துள்ளானோ அதில் நான் சோம்பேறித்தனம் காட்டுவது முற்றிலும் சாத்தியமற்ற ஒன்றாகும். சூரியன் ஒருபுறமிருந்து புறப்பட்டு பின்பு ஒன்றாக இணைந்து நசுக்கி விட விரும்பினாலும் சரியே! மனிதன் என்பவன் ஒரு புழு, ஒரு சதை பிண்டமேயன்றி வேறில்லை. அப்படி இருக்கும்போது ஒரு பூச்சிக்காக அல்லது ஒரு சதைக்கட்டிக்காக என்றென்றும் நிலைத்திருக்கக் கூடியவனின் கட்டளையை எவ்வாறு என்னால் நிராகரிக்க முடியும்? எவ்வாறு இறைவன் முந்தைய நபிமார்கள் மற்றும் நிராகரிப்பாளர் –களிடையே இறுதியில் ஒருநாள் தீர்ப்பு வழங்கினானோ அதேபோல் இந்த நேரத்திலும் தீர்ப்பு வழங்குவான். இறைவனது தூதர்கள் வருவதற்கும் ஒரு (குறிப்பிட்ட) காலம் உண்டு. செல்வதற்கும் ஒரு காலம் உண்டு. எனவே, நான் காலம் தவறி வரவுமில்லை; காலம் தவறி செல்லவும் மாட்டேன் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். இறைவனோடு சண்டையிடாதீர்கள். என்னை அழிப்பது உங்கள் வேலையல்ல.

(ஸமீமா துஃபா கோசுல்டுவிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 49)

## எதிரிகள் தேவையில்லாமல் சுயமே தங்களை அழித்துக் கொண்டிருக்கின்றனர். நான் அவர்களது கையால் பிடுங்கி எறியப்படும் செடி அல்ல

எனது ஆன்மாவில் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதே உண்மை இருக்கின்றது. எனக்கு இறைவனுடன் இப்ராஹீம் (அலை) அவர்களுடன் அவனுக்கு இருந்த அதே தொடர்பு இருக்கின்றது. எவரும் எனது இரகசியத்தை அறிய மாட்டார். ஆனால், எனது இறைவன் அதை அறிந்துள்ளான். எதிரிகள் தேவையில்லாமல் சுயமே தங்களை அழித்துக் கொண்டிருக்கின்றனர். நான் அவர்களது கையால் பிடுங்கி எறியப்படும் செடி அல்ல. இவர்களுக்கு முன்னிருந்தவர்களும், இவர்களுக்கு பிறகு வந்தவர்களும், இவர்களில் உயிருடன் இருப்பவர்களும், இவர்களில் மரணித்துப் போனவர்களும் ஆகிய இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எனது அழிவிற்காக துஆக்கள் செய்தாலும் எனது இறைவன் அந்த எல்லா துஆக்களையும் சாபத்தின் வடிவத்தில் மாற்றி அவர்களது முகத்தில் எறிந்து விடுவான். பாருங்கள்! நூற்றுக்கணக்கான அறிவுள்ள மனிதர்கள் உங்களது ஜமாஅத்திலிருந்து வெளியேறி நமது ஜமாஅத்தில் சேர்ந்து கொண்டே இருக்கின்றனர். வானத்தில் ஒரு கூச்சல் எழுந்துள்ளது. மேலும் மலக்குகள் தூய உள்ளங்களை ஈர்த்து இந்த பக்கம் கொண்டு வருகின்றனர். இப்போது இந்த வானத்து நடவடிக்கையை மனிதன் தடுத்து நிறுத்த முடியுமா? உங்களுக்கு ஆற்றல் இருந்தால் தடுங்கள். நபிமார்களின் எதிரிகள் கையாண்ட அந்த எல்லா சூழ்ச்சிகளையும் ஏமாற்று வேலைகளையும் செய்யுங்கள். எந்தவொரு திட்டத்தையும் கை விட்டு விடாதீர்கள். விரல் நுனிகள் வரை அழுத்தம் காட்டுங்கள். மரணம் வரை சென்றடைகின்ற வகையில் அந்த அளவு துஆக்கள் செய்யுங்கள். பிறகு என்ன சீர்குலைவை ஏற்படுத்தி விட முடியும்? என்பதைப் பாருங்கள். இறைவனின் வானத்து அடையாளங்கள் மழையைப் போன்று பொழிகின்றன. ஆனால், பாக்கியமற்ற மனிதர்கள் தொலைவில் இருந்து கொண்டு ஆட்சேபனை செய்கின்றனர். எந்த உள்ளங்களில் முத்திரைகள் வைக்கப்பட்டிருக் –கின்றதோ அவற்றிற்கு நாம் என்ன சிகிச்சை செய்ய முடியும்? இறைவா! நீ இந்த உம்மத்தின் மீது கருணை காட்டுவாயாக. ஆமீன்.

(அர்பயீன். எண் 4. ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 472)

அல்லாஹ் முஸ்லிம் உம்மத்திற்கு நேர்வழியை வழங்குவானாக. அவர்கள் இந்தக் காலத்தின் இமாம் ஆகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமாகிய ஸய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் மீது நம்பிக்கை கொள்பவர்களாக ஆவார்களாக. மேலும் தமது இம்மையையும் மறுமையையும் சரி செய்பவர்களாக ஆவார்களாக. ஆமீன்.

- மன்சூர் அஹ்மது மஸ்ரூர்

2017 ஆம் ஆண்டு நடைபெற்ற காதியான் ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட உரை

# எச்சரிக்கை மற்றும் நற்செய்தியினைக் கொண்ட முன்னறிவிப்புகளின் ஒளியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம்

மவ்லவி சுல்தான் அஹ்மது ஸஃபர்

وَمَا نُرْسِلُ الْمُرْسَلِيْنَ اِلَّا مُبَشِّرِيْنَ وَمُنْذِرِيْنَ ۚ فَمَنْ اٰمَنَ وَاَصْلَحَ فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ○ وَالَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِنَا يَمَسُّهُمُ الْعَذَابُ بِمَا كَانُوْا يَفْسُقُوْنَ ○

عٰلِمُ الْغَيْبِ فَلَا يُظْهِرُ عَلٰى غَيْبِهٖٓ اَحَدًا ○ اِلَّا مَنِ ارْتَضٰى مِنْ رَّسُوْلٍ

மதிப்பிற்குரிய மாநாட்டின் தலைவர் அவர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு

நீங்கள் செவியுற்றது போல் எனது சொற்பொழிவின் தலைப்பு 'ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம், எச்சரிக்கை மற்றும் நற்செய்திகளைக் கொண்ட முன்னறிவிப்புகளின் ஒளியில்' என்பதாகும்.

ஆரம்பத்தில் நான் ஓதிய திருக்குர்ஆன் வசனங்களில் அல்லாஹ், நற்செய்தி உடையவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமின்றி நாம் தூதர்களை அனுப்புவதில்லை. ஆகவே, நம்பிக்கை கொண்டு (தம்மைச்) சீர்த்திருத்திக் கொள்கின்றவர்களுக்கு (வருங்காலத்தைப் பற்றி) எவ்விதப் பயமும் ஏற்படாது. அவர்கள் (சென்ற காலம் பற்றிக்) கவலைப்படவும் மாட்டார்கள். மேலும் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்குவோருக்கு அவர்களின் கட்டுப்படாத நிலை காரணத்தினால் நமது தண்டனை அவர்களைப் பற்றிக் கொள்ளும் என்று கூறுகின்றான்.

கண்ணியத்திற்குரியவர்களே! எந்தவொரு நபியின் முன்னறிவிப்புகளையும் நாம் ஒட்டுமொத்தமாக பார்ப்போம் என்றால் திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறியிருப்பது போன்று அந்த முன்னறிவிப்புகளில் அடிப்படையாக இரண்டு முக்கிய அம்சங்கள் நற்செய்தி மற்றும் எச்சரிக்கை அடங்கியிருக்கும்.

சகோதர, சகோதரிகளே! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதம் தொடர்பாக சந்தேகம் கொண்டிருப்பவர்களைப் பார்த்து அன்னார் கூறுகின்றார்கள்: "எனது வாதம் தொடர்பாக உங்களுக்கு சந்தேகம் இருக்குமாயின், மேலும் உண்மையின் தேட்டமும் இருக்குமாயின் பிறகு அந்த சந்தேகத்தைக் களைவது எளிதானதாகும். ஏனென்றால், ஒவ்வொரு நபியின் உண்மைத்துவம் மூன்று வழிமுறைகளினால் அடையாளங் கண்டு கொள்ளப்படுகிறது.

முதலாவது வழிமுறை, அறிவின் மூலமாக அடையாளங்கண்டு கொள்வதாகும். அதாவது, அந்த நபி வந்திருக்கக்கூடிய நேரம் நபியின் வருகைக்கான தேவை உடையதாக இருக்கின்றதா? இல்லையா? மேலும், மனிதர்களின் நிலைமை ஒரு சீர்திருத்தவாதியை எதிர்ப்பார்க்கிறதா? இல்லையா? என்பதற்கு அறிவு சான்று பகர வேண்டும். இரண்டாவது அம்சம், முந்தைய நபிமார்களின் முன்னறிவிப்புகள் அதாவது, அதற்கு முன்பு ஏதேனும் நபி அவர் தொடர்பாக அல்லது அவருடைய காலத்தில் ஒருவர் தோன்றுவது பற்றி முன்னறிவித்து இருக்கின்றாரா? இல்லையா? என்று பார்க்க வேண்டும். மூன்றாவதாக, இறை ஒத்தாசைகள் மற்றும் வானத்தின் உதவிகள் அதாவது விண்ணிலிருந்து அவருக்கு ஏதேனும் உதவிகள் வருகின்றனவா? அல்லது இல்லையா? என்று பார்க்க வேண்டும்.

இந்த மூன்று அடையாளங்களும்தான் ஓர் உண்மையான இறைவன் புறமிருந்து வரக் கூடியவரை அடையாளங்கண்டு கொள்வதற்கென ஆரம்பதிலிருந்தே விதிக்கப்பட்டிருக்கின்றது. இப்போது நண்பர்களே! இறைவன் உங்கள் மீது கருணை புரிவானாக. இந்த மூன்று அடையாளங்களும் எனது உண்மைத்துவத்திற்காக ஒரே இடத்தில் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன. விரும்பினால் ஏற்றுக் கொள்ளுங்கள் அல்லது ஏற்றுக் கொள்ளாமல் இருங்கள். அறிவின் கண் கொண்டு பார்த்தால் ஒரு நேரான அறிவு வேண்டுவது என்னவென்றால் முஸ்லிம்களுக்கு விண்ணிலிருந்து ஒரு சீர்திருத்தவாதியின் வருகையின் தேவை உள்ளது. அக மற்றும் புற நிலைமைகள் மிகவும் மோசமானதாக உள்ளன. எந்த அளவுக்கு என்றால் முஸ்லிம்கள் ஒரு குழியின் விழிம்பில் நின்று கொண்டிருக்கின்றார்கள். முந்தைய நபிமார்களின் முன்னறிவிப்புகளை ஆராய்ந்தால் தானியால் நபியும் கூட என்னைப் பற்றியும் எனது காலத்தைப் பற்றியும் முன்னறிவித்துள்ளார்கள்.

மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட இந்த உம்மத்திலிருந்துதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வருவார்கள் என்று கூறியுள்ளார்கள். எவரேனும் இதுபற்றி அறியாமல் இருக்கின்றார்கள் என்றால் சஹீஹ் புகாரி மற்றும் சஹீஹ் முஸ்லிமை பார்க்கட்டும். மேலும், நூற்றாண்டின் ஆரம்பத்தில் முஜத்தித்தின் வருகை பற்றிய முன்னறிவிப்பையும் படிக்கட்டும். எனக்கு இறை உதவிகள் இருக்கின்றதா? என்பதை ஒருவர் பார்க்க விரும்பினால் இதுவரை ஆயிரக்கணக்கான அடையாளங்கள் வெளிப்பட்டு விட்டன என்பதை அவர் நினைவில் கொள்ளட்டும்."

(ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 241)

மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "என்னுடைய முன்னறிவிப்புகளும் நிறைவேறாமல் இருந்ததில்லை. அல்லது அதன் இரண்டு அம்சங்களில் ஓர் அம்சம் கூட நிறைவேறாத எந்தவொரு முன்னறிவிப்புகளும் இல்லை. ஒருவர் தேடித் தேடி மரணமடைந்து விட்டாலும் கூட நிறைவேறாத முன்னறிவிப்பு தொடர்பாக அது நிறைவேறவில்லை என்று அவரால் கூற முடியாது. ஆனால் வெட்கம் இல்லாமலோ அறியாமலோ வேண்டுமென்றால் கூறிக் கொள்ளலாம். என்னுடைய ஆயிரக் கணக்கான தெளிவான முன்னறிவிப்புகள் மிகத் தெளிவான முறையில் நிறைவேறி இருக்கின்றன. மேலும் அதற்கு இலட்சக் கணக்கானோர் சாட்சிகளாக இருக்கின்றனர் என்று என்னால் வாதம் செய்து கூற முடியும். இதைப் போன்ற ஒரு முன்னுதாரணத்தை கடந்த நபிமார்களிடத்தில் தேடினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எங்கும் காண இயலாது."

(ரூஹானீ கஸாயின் தொகுதி 19 நூஹ் நபியின் கப்பல் பக்கம் 6)

கண்ணியத்திற்குரியவர்களே! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்புகளும் கூட திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள நபிமார்களின் முன்னறிவிப்புகளைப் போன்று நற்செய்தி மற்றும் எச்சரிக்கை என்ற இரு அம்சங்களையும் கொண்டுள்ளன. காலத்தின் அருமையைக் கருதி நான் அன்னாரின் ஆயிரக்கணக்கான முன்னறிவிப்புகளிலிருந்து ஒரு சிலவற்றை எடுத்து வைப்பதற்கு முயற்சி செய்வேன் – இன்ஷா அல்லாஹ்.

### நற்செய்திகள் அடங்கிய முன்னறிவிப்புகள்

**1882** ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறைவன் புறமிருந்து அனுப்பப் பட்டிருப்பதாக அன்னாருக்கு வந்த முதல் இல்ஹாமின் வார்த்தைகள் இதுவாகும்:

"يَا اَحْمَدُ بَارَكَ اللهُ فِيْكَ مَارَمَيْتَ اِذْ رَمَيْتَ وَلٰكِنَّ اللهَ رَمٰى اَلرَّحْمٰنُ عَلَّمَ الْقُرْاٰنَ لِتُنْذِرَ قَوْمًامَّا اُنْذِرَ اٰبَآءُهُمْ وَلِتَسْتَبِيْنَ سَبِيْلُ الْمُجْرِمِيْنَ قُلْ اِنِّيْ اُمِرْتُ وَاَنَا اَوَّلُ الْمُؤْمِنِيْنَ

அதாவது அஹ்மதே! இறைவன் உம்மிடத்தில் அருளை வைத்துள்ளேன். நீ எறிந்ததை நீ எறியவில்லை. மாறாக இறைவன் எறிந்தான். அந்த இறைவனே திருக்குர்ஆனை கற்றுக் கொடுத்திருக் –கின்றான். அதாவது அதன் உண்மையான பொருளை உனக்கு தெரியப்படுத்தி இருக்கின்றான். எவர்களின் மூதாதையர்கள் அச்சமூட்டப்படவில்லையோ அவர்களை அச்சமூட்ட வேண்டும் என்பதற்காக அவன் அவ்வாறு செய்துள்ளான். மேலும் உன்னை மறுப்பதன் காரணமாக குற்றவாளிகளின் மீது அத்தாட்சிகள் முழுமையடைய வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்துள்ளான். நான் இறைவன் புறமிருந்து வந்துள்ளேன் என்று அவர்களிடம் கூறுவீராக. மேலும் நான் ஈமான் கொண்டவர்களில் முதன்மை –யானவன் ஆவேன் என்று கூறுவீராக. (பராஹீமே அஹ்மதிய்யா பாகம் 5)

சபையோர்களே! இந்த இல்ஹாமிலிருந்து அல்லாஹ் அன்னாரை ஒரு மாபெரும் நோக்கத்திற்காக அனுப்பி இருக்கின்றான். அந்த இலக்கு ஒரு சாதாரண இலக்கு அல்ல. மாறாக, முழு உலகிலும் அனைத்து மார்க்கங்களின் மீதும் இஸ்லாத்தை மேலோங்கச் செய்வதற்கான பணி அன்னாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். மேலும் அந்த நேரத்தில் அன்னாரின் ஆதரவற்ற நிலை மற்றும் கஷ்டமான சூழ்நிலை எவ்வாறு இருந்தது என்றால் அதை அன்னாரின் வார்த்தைகளிலேயே உங்கள் முன் எடுத்து வைக்கின்றேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறுகின்றார்கள்: "நான் என்னைப் பார்க்கும்போது நான் முற்றிலும் அறியப்படாதவ –னாகவும் மக்களிலிருந்து தனித்தவனாகவும் இருந்தேன். காரணம் என்னவென்றால், மக்கள் என்னைச் சுற்றி அமர்வதற்கும், என்னுடைய கொள்கையை உடையவர்களாக இருப்பதற்கும் நான் ஏதேனும் அரச குடும்பத்தைச் சார்ந்திருக்கவில்லை. நூற்றுக்கணக்கான சீடர்கள் என்னோடு தொடர்பு கொண்டிருப்பதற்கு நான் ஓர் ஆலிம் ஃபாஸிலின் குடும்பத்தைச் சார்ந்தவனாக இருக்கவில்லை. என்னுடைய அறிவின் மீது நம்பிக்கை வைப்பதற்கு நான் ஏதேனும் ஆலிம் ஃபாஸிலிடம் முறையாகக் கல்வி பயின்றவனாகவோ அல்லது சான்றிதழ் பெற்றவனாகவோ இருக்கவில்லை. மேலும், என்னுடைய ஆட்சியின் கம்பீரத்தின் காரணமாக ஆயிரக்கணக்கானோர் என்னை பின்பற்றுவதற்கு நான் அரசனாகவோ, நவாபாகவோ, மன்னராகவோ இருக்கவில்லை. மாறாக, நான் ஒரு எளிய அறியப்படாத கிராமத்தைச் சார்ந்தவராக இருந்தேன். மேலும், உலகத்தின் கவனம் எந்த புகழ்பெற்ற மக்களின் பக்கம் இருந்ததோ அவர்களை விட்டு நான் தனித்தவனாக இருந்தேன்....."

ஆக, இந்த இறை அறிவிப்பதற்குப் பிறகு எனக்கு ஓர் இக்கட்டான நிலையாக இருந்தது. மேலும் என்னுடைய வாழ்க்கையை நிலைநாட்டுவதற்கு இறைவனின் மகத்தான வாக்குறுதிகள் எனக்கு ஆறுதல் அளிப்பதை நான் எதிர்ப்பார்த்தேன். இதன் காரணமாக நான் அழிந்து விடக்கூடாது என்பதற்காக அதை நான் எதிர்ப்பார்த்தேன். அந்த வல்லமையுள்ள இறைவன் அவ்வாறே என்னோடு நடந்து கொண்டான். என்னுடைய அந்த இயலாத நிலைமையில் மற்றும் நிம்மதி இழந்த நிலைமையில் அவன் என்னை நற்செய்திகளை வழங்கக்கூடிய முன்னறிவிப்புகளோடு பற்றிப்பிடித்தான். ஆக, நான் எவ்வாறு அவனுக்கு நன்றி கூறுவேன்?

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5 பக்கம் 52–54)

அல்லாஹ் அன்னாரிடம் மிகவும் அன்போடு ஆறுதல் மற்றும் நற்செய்தி வழங்கியவாறு கூறினான்:

لَا تَيْئَسْ مِنْ رَّوْحِ اللهِ "اَلَا اِنَّ نَصْرَ اللهِ قَرِيْبٌ -يَاْتِيْكَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ
يَاْتُوْنَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ -يَنْصُرُكَ اللهُ مِنْ عِنْدِهٖ - يَنْصُرُكَ رِجَالٌ نُّوْحِيْ اِلَيْهِمْ مِّنَ
السَّمَآءِ -وَلَا تُصَعِّرْ لِخَلْقِ اللهِ وَلَا تَسْئَمْ مِّنَ النَّاسِ -اَصْحَابُ الصُّفَّةِ وَمَا اَدْرَاكَ مَا
اَصْحَابُ الصُّفَّةِ تَرٰى اَعْيُنُهُمْ تَفِيْضُ مِنَ الدَّمْعِ -يُصَلُّوْنَ عَلَيْكَ

அதாவது, அல்லாஹ்வின் உதவி மிக அருகில் உள்ளது. அந்த உதவி ஒவ்வொரு தூரத்திலிருந்தும் உம்மை வந்தடையும். மேலும் எப்படிப்பட்ட வழிகளை கடந்து வரும் என்றால், அந்த வழிகளில் உன் பக்கம் மக்கள் அதிகமாக நடந்து வந்ததன் காரணமாக குழிகள் விழுந்திருக்கும். மேலும், எந்த அளவுக்கு உன் பக்கம் மக்கள் வருவார்கள் என்றால் அவர்கள் நடக்கும் வழி குழிகளாகி விடும். நாம் எவர்களுடைய உள்ளத்தில் நமது காலம் அருகில் உள்ளது. எனவே நீ அவர்களோடு தகாத முறையில் நடந்து கொள்ள வேண்டாம். மேலும் அதிகமான மக்களைக் கண்டு நீ களைப்படைந்து விட வேண்டாம். மேலும் அவர்கள் தம்முடைய நாடுகளிலிருந்து ஹிஜ்ரத் செய்து உமது நான்கு சுவற்றுக்குள் வந்து குடியேறுவார்கள். அவர்களே இறைவனின் பார்வையில் திண்ணைத் தோழர்கள் என்று அழைக்கப்படுகின்றார்கள். அவர்கள் எந்த அளவுக்கு மகத்துவ மிக்கவர்கள், ஈமானைக் கொண்டவர்கள் என்பதை நீ எவ்வாறு அறிவாய்? அவர்கள் மிக வலுவான ஈமாமை உடையவர்களாக இருப்பார்கள். அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வடிவதை நீர் காண்பீர். அவர்கள் உன் மீது தருது அனுப்புவர்.

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 3 பக்கம் 238–242)

கண்ணியத்திற்குரியவர்களே! இந்த அனைத்து முன்னிவிப்பு –களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வாழ்நாளிலேயே மிகச் சிறப்பான முறையில் முழுமையடைந்தன. இன்று உலகம் இவ்விஷயத்திற்கு சான்று பகர்கின்றது. ஒரு சிறிய அறியப்படாத கிராமத்திலிருந்து மிகவும் அறியப்படாத ஒரு மனிதரை அல்லாஹ் மனித குலத்தின் சீர்திருத்தத்திற்காக அனுப்பியபோது இறைவனுடைய மஸீஹ் மற்றும் மஹ்தியின் வருகையின் செய்தியை அறிந்து பெரும்பாலான இறை அடியார்கள் காதியானை நோக்கி பயணித்தனர். மேலும், மிக அதிகமான தொலைவிலிருந்து பயணம்

செய்தும் காதியான் வந்தடைந்தனர். சிலர் காதியானை நிலையான தங்குமிடமாக ஆக்கிக் கொண்டனர். மேலும் சிலர் அன்னாரை சந்தித்து அருள் பெற்று விட்டு, சில நாட்கள் காலத்தின் இமாமோடு கழித்து விட்டு தத்தமது நாடுகளுக்கு திரும்பினர்.

இந்த முன்னறிவிப்பு சொல்லப்பட்டு 25 வருடங்கள் கழிந்திருந்த நிலையில் இது முழுமை அடைந்தது தொடர்பாக அன்னாரே இவ்வாறு கூறுகின்றார்கள்: ‘‘இறைவன் இந்த முன்னறிவிப்பை முழுமை அடையச் செய்வதற்கு தன் அடியார்களுக்கு என் பக்கம் கவனம் ஏற்படுமாறு செய்தான். மேலும் கூட்டம் கூட்டமாக மக்கள் காதியான் வந்தனர்; வந்து கொண்டிருக்கின்றனர். பணமாகவும், பொருளாகவும் எல்லா வகையான அன்பளிப்புகளையும் அதிகமாக வழங்கினர்; வழங்கிக் கொண்டிருக்கின்றனர். அதை என்னால் கணக்கிட இயலாது. மவ்லவிகள் தரப்பிலிருந்து எல்லா வகையிலும் தடைகள் ஏற்படுத்துப்பட்டன. மேலும் அவர்கள், மக்கள் என் பக்கம் திரும்பாமல் இருப்பதற்கு விரல் நுனி வரை அழுத்தம் கொடுத்தனர். ஆனால் அவர்கள் தமது நோக்கங்களில் தோல்வியடைந்தனர். முடிவு எவ்வாறாக இருந்தது என்றால், எனது ஜமாஅத் பஞ்சாபின் அனைத்து நகரங்களிலும் கிராமங்களிலும் பரவி விட்டது. மேலும் இந்தியாவிலும் ஆங்காங்கே விதை விதைக்கப்பட்டு விட்டது. மாறாக, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் நல்லியல்பு கொண்ட ஆங்கிலேயர்கள் கூட இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு இந்த ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். மேலும் எந்த அளவுக்கு கூட்டம் கூட்டமாக மக்கள் காதியான் வந்தனர் என்றால் குதிரை வண்டிகள் அதிகமானதன் காரணமாக காதியானின் சாலைகளில் குழிகள் விழுந்தன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த முன்னறிவிப்பை நன்றாக சிந்திக்க வேண்டும். மேலும் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். ஒரு சிறிய விதை விதைக்கப்பட்டு அதன் பிறகு அது ஆயிரக்கணக்கான பாதங்களால் மிதிக்கப்பட்டது. புயல்கள் வீசின. சூறாவளி வந்தது. மேலும் கூச்சல், கிளர்ச்சி போன்றவற்றின் வெள்ளம் இந்த சின்ன ஒரு விதையின் மீது வந்தது. பிறகும் கூட நான் இந்த துன்பங்களிலிருந்து தப்பித்து விடுவேன் என்று யார் அறிந்திருக்க முடியும்? எனவே அந்த விதை இறை அருளால் வீணாகவில்லை. மாறாக, அது வளர்ந்தது. மலர்ந்தது. மேலும் இன்று ஒரு பெரும் மரமாக ஆகி விட்டது. அதன் நிழலின் கீழ் மூன்று லட்சம் மனிதர்கள் நிம்மதியடைகின்றனர். இது இறைவனின் பணிகளாகும். இதை முன்னதாகவே அறிவது மனித சக்திக்கு அப்பாற்பட்டதாகும். (ஹகீக்கத்துல் வஹீ பக்கம் 249).

கண்ணியத்திற்குரியவர்களே! இது 1907 ஆம் ஆண்டு சொல்லப்பட்டதாகும். இன்றைய நாட்களில் வருடம் முழுவதும் மிக அதிகமாக அந்த தூய மஸீஹின் விருந்தினர்கள் காதியான் வருகின்றனர். குறிப்பாக ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தின் போது உலகம் முழுவதிலும் பல நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் அஹ்மதிய்ய ஒளியின் மின்மினிப் பூச்சிகள் இறுதி காலத்தின் மஸீஹின் தூய இடத்தின் பால் இழுத்து வரப்படுகின்றனர்.

## பொருளாதார உதவிகள்

பிறகு இந்த முன்னறிவிப்புகளில் இவ்வாறு இறைவன் கூறியிருந்தான். அதாவது, இறைவன் தன் தரப்பிலிருந்து உமக்கு உதவி செய்வான். மேலும், எவர்களுக்கு நாம் விண்ணிலிருந்து வஹி அறிவிப்போமா அம்மக்கள் உமக்கு உதவி செய்வார்கள்.

சகோதரர்களே! தனது உணவு விரிப்பில் மிஞ்சிய உணவை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்காக அனுப்பப்பட்ட ஒரு காலம் இருந்தது. ஆனால், இறை நற்செய்திக்கு ஏற்ப இன்று ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அன்னாரின் உணவு விரிப்பிலிருந்து பலன் பெறுகின்றனர். இந்த இறை அருளைப் பற்றி கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது ஒரு அரபி கவிதையில் கூறுகின்றார்கள்:

لفاظات الموائد كان أكلي     فصرت اليوم مطعام الاهالي

அதாவது, ஒரு காலத்தில் மற்றவர்களின் உணவு விரிப்பில் எஞ்சிய துண்டுகளே எனது உணவாக இருந்தது. ஆனால், இன்று நிலைமை எப்படி என்றால், பல குடும்பங்கள் எனது உணவு விரிப்பிலிருந்து உணவு உண்டு வருகின்றன.

பிறகு ஒரு காலம் எப்படிப்பட்டதொரு காலமாக இருந்ததென்றால், ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் விருந்தினர்களுக்கு உணவு அளிப்பதற்கு பைசா இருக்கவில்லை. ஹுஸூர் (அலை) அவர்கள் தனது மாமனார் மதிப்பிற்குரிய மீர் நாஸிர் நவாப் சாஹிப் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். எனது மனைவியின் ஏதேனும் ஒரு நகையை விற்று விருந்தினர்களின் உணவிற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள்.

ஆனால், அல்லாஹ்வால் வழங்கப்பட்ட முன்னறிவிப்பிற்கேற்ப இன்று ஒவ்வோர் ஆண்டு மாநாட்டின்போதும் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவாகின்றன. இன்னும் சொல்வதென்றால், இன்று உலகின் ஏராளமான நாடுகளில் காதியானைப் போன்றே ஆண்டு மாநாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றது.

இதேபோல் ஒரு காலத்தில் பராஹீனே அஹ்மதிய்யா அச்சடிப்பதற்காக அன்னாரே அமிர்தசரஸ் சென்று வந்தார்கள். மேலும், அதன் அச்சீட்டுச் செலவுகள் பற்றி அதிகமாக கவலை அடைந்து வந்தார்கள். ஆனால், இன்று பொருளாதார ரீதியில் இறைவனின் உதவியின் நிலைமை எவ்வாறு இருக்கின்றது என்றால் அன்னாருடைய பணியை முழுமையடையச் செய்வதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத் ஒவ்வொரு வருடமும் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழிக்கின்றது. ஒரு சிறிய ஏழை ஜமாஅத்திடம் இவ்வளவு பணம் எங்கிருந்து வருகின்றது என்பதைக் கண்டு உலகம் வியப்பில் ஆழ்ந்து விடுகிறது. உலக சிந்தனையுடையவர்களுக்கு ஒன்றும் புரிய முடியாதபோது இவர்களுக்கு இஸ்ராயீலிலிருந்து பணம் வருகிறது என்று கூறி விடுகின்றனர் அல்லது இந்த நாடு இவர்களுக்கு உதவி புரிகிறது என்று கூறி விடுகின்றனர்.

இதே போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அமெரிக்கன் டாலரோ அல்லது கனேடியன் டாலரோ நமது செல்வமல்ல. ஐரோப்பியன் கரன்ஸியோ அல்லது பிரிட்டீஷ் பவுண்டோ நமது செல்வமல்ல. மாறாக, ஓர் ஒளிமயமான நெஞ்சத்திற்குள் துடித்துக் கொண்டிருக்கும் தூய்மையான உள்ளமே நமது செல்வமாகும். எதுவரை இந்த

உள்ளங்கள் நம்மிடத்தல் இருக்குமோ மேலும், எதுவரை இந்த நெஞ்சங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்குமோ பைசாவைப் பற்றிய கவலை யாருக்கு இருக்க முடியும்? தேவை ஏற்படும்போது அல்லாஹ் விண்ணிலிருந்து வழங்குவான்.

(குத்பா ஜும்ஆ 21 நவம்பர் 1975)

கண்ணியத்திற்குரியவர்களே! இப்போது நான் எப்படிப்பட்ட தொரு முன்னறிவிப்பைப் பற்றி கூறப்போகிறேன் என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் காலத்திலிருந்து இன்று வரை இது மிகச் சிறப்பாக பூர்த்தியாகிக் கொண்டு இருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு நற்செய்தி வழங்கியவாறு அல்லாஹ் கூறினான். ''நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை சென்றடையச் செய்வேன்.''

(தத்கிரா பக்கம் 260–இல்ஹாம் 1898).

இது 1898 –ல் வந்த இறை அறிவிப்பாகும். அப்போது அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை சில ஆயிரங்களாக இருந்தன.

இப்படிப்பட்ட நிலைமையில் இதுவொரு மாபெரும் முன்னறிவிப்பாக ஆகி விடுகின்றது. ஏனென்றால் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் 210 நாடுகளில் பரவி விட்டது. மேலும் ஜமாஅத்தின் எண்ணிக்கை ஆயிரங்களிலிருந்து வெளியேறி இலட்சமாகி இப்போது கோடிகள் வரை எட்டி விட்டது.

கண்ணியத்திற்குரியவர்களே! அல்லாஹ் தனது வாக்குறுதிக்கு ஏற்ப நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்பதற்கேற்ப ஜமாஅத்திற்கு தப்லீகிற்கான பல வழிவகைகளை வழங்கி இருக்கின்றான். உதாரணமாக, இன்று அஹ்மதிய்யா கிலாஃபத்தின் நிழலின் கீழ் அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகின் எல்லை வரை பரப்புவதற்கு உலகம் முழுவதிலும் ஆயிரக்கணக்கான தப்லீக் சென்டர்கள் நிறுவப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான வாழ்க்கையை அர்ப்பணித்த முபல்லிக்மார்கள் மற்றும் முஅல்லிமீன்கள் தூதுச் செய்தியைப் பரப்பும் பணியில் இரவு பகலாக ஈடுபட்டு வருகின்றனர். உலகின் பல நாடுகளில் பல்வேறு மொழிகளில் புத்தகங்கள் வெளியிடுவதற்கென புத்தம் புதிய தொழில் நுட்பங்களைக் கொண்ட Printing press நிறுவப்பட்டுள்ளன. இப்போது வரை 75 மொழிகளில் திருக்குர்ஆனின் மொழி பெயர்ப்புகள் வெளியிடப்பட்டு விட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக முஸ்லிம் டெலிவிஷன் அஹ்மதிய்யா இன்டர்நேஷனல் நிறுவப்பட்டிருக்கின்றது. அதன் மூன்று சேனல்கள் முழு உலகிலும் 24 மணி நேரமும், 'வானின் குரலை கேளுங்கள். மஸீஹ் வந்து விட்டார். மஸீஹ் வந்து விட்டார்' என்று உலகை அழைத்துக் கொண்டு இருக்கின்றது.

கண்ணியத்திற்குரியவர்களே! இன்று இதே MTA –வின் அருளினால் அஹ்மதிய்யத்தின் உலகில் வரும் ஒவ்வொரு ஜுமுஆவும் புது மாண்போடும் அருட்களோடும் உதயமாகின்றது. உலகின் 210 நாடுகளின் கோடிக்கணக்கான அஹ்மதிகள் பள்ளிவாயில்களிலும் தொழுகை நிலையங்களிலும் மேலும் தத்தமது வீடுகளிலும் டிவியின் முன் அமர்ந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதியவாறு தனது அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் அய்யத்தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுடைய ஜுமுஆ குத்பாவிற்காக பொறுமையிழந்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். இதே போன்று உலகம் வேறு எவருடைய குத்பாவையாவது கேட்கிறதா? மேலும் எவருடைய தூதுச் செய்தியாவது உலகின் எல்லைகள் வரை சென்று கொண்டிருக்கிறதா? என்று யாராவது கூறுங்கள்.

கண்ணியத்திற்குரியவர்களே! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வாழ்நாளிலேயே அன்னாரின் தூதுச் செய்தி இந்தியாவிற்கு வெளியிலும் பல நாடுகளில் சென்றடைந்து இருந்தது. மேலும் மக்கள் அன்னாரின் மீது ஈமான் கொண்டிருந்தனர். அன்னாரின் வஃபாத் வரை நான்கு இலட்சம் மக்கள் அன்னாரிடம் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்திருந்தனர். ஆனால், இன்று ஐந்தாவது கிலாஃபத் காலகட்டத்தில் எப்படிப்பட்ட இறை அருட்களில் பெரும் மழை பொழிந்து கொண்டிருக்கின்றது என்றால் அதைக் கணக்கிடுவது இயலாததாகும்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யத்தஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் மகத்தான தலைமையின் கீழ் ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் எல்லா ரீதியிலும் முன்னேற்றங்களின் புத்தம் புது இலக்குகளைக் கடந்து கொண்டிருக்கின்றன. தப்லீக்கின் புத்தம் புதிய வழிகள் திறந்து கொண்டிருக்கின்றன. இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளை உள்ளடக்கிய சொற்பொழிவுகளை ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யத்தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பிரித்தானிய ஐரோப்பிய பாராளுமன்றங்களிலும் டச்சு பாராளுமன்றங்களிலும், ஜெர்மனி இராணுவ தலைமையகங்களிலும், அமெரிக்காவின் கேபிட்டல் ஹில்லிலும் நிகழ்த்தியுள்ளார்கள். அதே போல் ஏராளமான அமைதி கருத்தரங்குகளிலும் ஆற்றிய அன்னாரது சொற்பொழிவுகள் மூலமாக உலகின் கோடிக்கணக்கான மக்கள் வரை அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்றடைந்தது.

இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனையை உள்ளடக்கிய அன்னாரது இந்த போதனைகள் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் படித்தறிந்த மக்களின் இஸ்லாம் தொடர்பான அவர்களின் தவறான பார்வையை மாற்றுமாறு நிர்பந்தத்திற்கு உள்ளாக்கின.

கண்ணியத்திற்குரியவர்களே! இன்று ஜமாஅத்திற்கு ஐரோப்பாவின் ஒத்துழைப்பு கிடைக்கிறது என உலகவாதிகளும், அறிவீனர்களும், வெறுப்பை உடைய மவ்லவிகளும் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தோ! இந்த உலகவாதிகளான மவ்லவிகள் உலகத்தின் கண்ணாடியை கழற்றி விட்டு சிந்தித்துப் பார்த்தால் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஐரோப்பாவின் ஒத்துழைப்பு அல்ல. மாறாக, இறைவனின் ஒத்துழைப்பு இருக்கின்றது என்பதை அறிந்து கொள்வார்கள். அவர்களின் முதுகுகள் உடைந்து விட்டன. அவர்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். எல்லா பக்கமும் குல்லுஹூம் ஃபின்நார் அதாவது அனைவரும் நெருப்பில் இருக்கும் காட்சியே தென்படுகின்றது. பொறாமையின் நெருப்பில் வெந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு பொறாமையின் நெருப்பில் எரிந்து சாம்பலாகுவதே விதிக்கப்பட்டிருக்கின்றது.

(தொடர்ச்சி 3-வது பக்கம்...)